# மணிபல்லவம்



## மணிபல்லவ கலாமன்றம் நயினாதீவு
## 28ம் ஆண்டு நிறைவு விசேடமலர்.

• 16 - 04 - 1990 •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

PUBLISHERS
BOOK-SELLERS
STATIONERS
&
PAPER MERCHANTS

# SRI LANKA BOOK DEPOT


234, K. K. S. ROAD,
JAFFNA.
Dial: 22569


*PARTNERS:*

N. KANDASAMY
K. RAJENDRAN
K. YOGENDRAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு (NAINATIVU)






Scale 1 12500

பிரமாணம் - 1cm 12500cm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. K. CHANDRAN
ADMINISTRATIVE OFFICER (DRCC)
for Government Agent, J. D.

# மணி பல்லவம்

★

நயினாதீவு
மணிபல்லவ கலாமன்றத்தின்

28 - வது ஆண்டு
நிறைவு விழாவையொட்டி
வெளியிடப்பட்ட

# சிறப்புமலர்

1990 ஏப்ரல் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின்
# ஆசியுரை

கூடி உழைத்துப் பின் ஆறிக் கலைகளில் ஊறிக் களிக்கும் நம்மக்களின் பண்புக்களமைய நயினாதீவு மணிபல்லவ கலா மன்றம் அதன் வருடாந்த கலை விழாக்கள் மூலம் விழுமிய இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை அளித்து வருவது மக்களின் சிந்தனையைச் செம்மைப்படுத்தும் ஒரு மெச்சத்தக்க நற்பணியாகும். இக்கலாமன்றத்தின் இருபத்தெட்டாவது கலை விழா நிகழ்ச்சிகள் பொலிந்து சிறப்புற என் ஆசிகள்.

செயலகம்
யாழ்ப்பாணம்.
10-04-90

அன்ரன் அல்பிரட்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவ கலாமன்றப் பணிகளை வாழ்த்துகிறேன்

வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் ஒருங்கமையப் பெற்ற திருத்தலம் நயினாதீவு அம்பாள் ஆலயமாகும். ஆலயத்தின் பெருமை அவ்வூர் முழுவதுக்கும் உரியதாக அமைந்து விட்டமை மேலும் ஒரு சிறப்பாகும். மணிபல்லவம் என்று மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்ற இத்தீவகம தமிழர்கலை கலாச்சாரத் துக்கு ஒரு இருப்பிடமாக அமைகிறது அருள் நலமிக்க ஞானி களும். கலைநலஞ்சான்ற பெருமக்களும் தமிழ் இலக்கண இலக்கிய விற்பன்னர்களும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் களும், கவித்துவம் மிக்க புலவர்களும் இசை வல்லார்களும் ஒன்று பட்டு அணிசெய்யும் சீர்மை பெற்றது நயினாதீவு. சொல்லச் சொல்லத் தித்திக்கும் நாமம் மணிபல்லவம். இருபத்தெட்டு ஆண்டு களாக கலை கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்தி இவ்வூரின் பெரு மையையும் அருமையையும் நிலைநாட்டிக் கொண்டு வருகின்ற சிறப்பு மணிபல்லவ கலாமன்றத்துக்கு உண்டு. இவ்வாண்டு சித்தி ரைத் திங்களில் நடைபெறவிருக்கும் கலை விழாவானது மேலும் ஒருபடி ஏற்றமுள்ள பெருவிழாவாக அமைய இருப்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். வள்ளுவர், நாவலர் பாரதி போன்ற தமிழ்ப் பெருஞ் சான்றோரை சிலையெடுத்து வணங்கி நிற்கும் திறனும் இவ்விழாவில் அமைய இருப்பது தமிழ்கூறு நல்லுலகத்துக்கு சிந்தையைக் குளிர்விக்கும் செய்தியாகும். எனவே அலை ஒலிக்க, சுடரொலிக்க, கலையொலிக்க, தமிழ் ஒலிக்க, அன்பர்கள் சிந்தை களிக்க இவ்விழா அமையவேண்டும் என அன்னை நாகபூஷணித் தாயின் திருவடிகளை வணங்கி அமைகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி.
தலைவர்;
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

நயினையின் கலை விழா மரபு மீட்டும் தொடங்கப் பெறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

கலையின் லெக்கவர்வுத் தன்மை, புலன் மகிழ்ச்சியுடன் முடித்து விடுவதில்லை. இந்தப் புலக்கவர்வு மூலமாக, ரசிகர், மனித நிலை பற்றிய ஒரு தெளிவினைப் பெற்றுக் கொள்கிறார். அந்தத் தெளிவு தெரியப்படும்பொழுது தான் கலை பற்றிய திருப்தி எற்படுகின்றது.

நடத்தப் பெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் திருப்தி தருவனவாக அமைய வேண்டுகிறேன்.

கார்த்திகேசு சிவத்தம்பி
தமிழ்ப் பேராசிரியர்,
தலைவர் நுண்கலைத்துறை,
யாழ் - பல்கலைக்கழகம்.

7 - 4 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் செய்தி

1962-ம் ஆண்டு அக்டோபர் மாத மாலைப் பொழுதொன்றில் மாணவர்களாகிய எங்கள் சிலரது சிந்தையிலே தோன்றிய கரு வளர்ந்து வியாபித்து மணிபல்லவ கலாமன்றம் என்ற ஸ்தாபனமாக உருவெடுத்தது.

1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இம் மன்றத்தின் முதலாவது கலைவிழாவை நடாத்திய நாம் இன்று இருபத்தெட்டாவது கலைவிழாவை நடாத்துகின்றோம்.

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் நாங்கள் நடந்துவந்த தடங்களைத் திரும்பிப் பார்க்கும் போது உள்ளம் பூரிக்கின்றது. புதிய உத்வேகம் பிறக்கின்றது.

மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம், ஆண்டுக்காண்டு மேலோங்கி வளர்ந்து தொடர்ச்சியாகப் பல்துறைச் சிறப்புப் பணிகள் புரிவதை நினைக்கும் போது உள்ளப் பூரிப்பு ஏற்படுகின்றது.

இது ஒரு தனி மனிதனதோ அல்லது தனிக் குழுவினதோ சாதனையல்ல. மூத்தோர், இளையோர் என்ற பாகுபாடோ கற்றோர், மற்றோர் என்ற வேறுபாடோ இன்றி நயினாதீவு மக்கள் அனைவரும் கூட்டாக அளித்த பேராதரவினதும் பங்காற்றல்களினதும் பலாபலனே இந்தச் சாதனை. இதை நினைத்துப் பார்க்கும் போது எங்கள் மக்களின் ஒத்துழைப்புடன் மேலும் பற்பல நற்பணிகள் புரிய வேண்டும் என்ற உத்வேகமும் - புரிய முடியும் என்ற நம்பிக்கையும் பிறக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு துறைகளில் திறமையுள்ளோரையும். பொதுப் பணி புரிந்தோரையும் பொன்னுடை போர்த்தியும் பொற்கிழி அளித்தும் காலத்துக்குக் காலம் கௌரவித்திருக்கிறேம். இவ்வாறு கௌரவிக்கும் பணி தொடரும். அடுத்து வரும் கலைவிழாக்களிலும் இடம்பெறும்.

இன்று வள்ளுவருக்கும், பாரதியாருக்கும், நாவலருக்கும் சிலையெடுக்கிறேம். எம்மை விட்டுப் பிரிந்த எம்மூர்ப் பெருந்தகைகளின் உருவப்படங்களைத் திரைநீக்கம் செய்கிறேம். நல்லன செய்தார்க்கு எல்லா நாளும் நம் கடன் தீர்ப்போம்.

இக் கலைவிழாவின் ஒரு அம்சமாக எம்மூர் மக்களின் பாவனைக்காகத் தகரக் கொட்டகையும் இரும்பு நாற்காலிகளும் வழங்கப்படுகின்றன. இத் தீவகத்தின் சமுக, பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட சில நடவடிக்கைகளை எடுக்கும் எண்ணமும் எமக்குண்டு. நயினுதீவு மக்களின் பேராதரவும்-அம்பாளின் அருளும் எமக்கிருப்பதனுல் இந்த எண்ணம் நிறைவேறுவது திண்ணம்.

''பிறந்த மண்ணினும் பெரிதொன்று வேறிலை''

க. க. சந்திரன்
தலைவர்

நயினுதீவு-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவ கலா மன்றம் நயினாதீவு

## செயற் குழு – 1990

| | |
|---|---|
| *தலைவர்:* | திரு. கே. கே. சந்திரன். |
| *உபதலைவர்:* | திரு. சி. இரத்தினசபாபதி. |
| *செயலாளர்:* | திரு. சு. திவாகரன். |
| *உபசெயலாளர்:* | திரு. இரா. லோகநாதன். |
| *பொருளாளர்:* | திரு. வீ. வை. யோகலிங்கம். |
| *உபபொருளாளர்:* | திரு. சி. தனபாலசிங்கம். |
| *போட்டிகளுக்கான செயலாளர்:* | திரு. ப. க. மகாதேவா. |

*நிர்வாகக் குழு:*

திரு. ஆர். ஆர். பி. ஸ்ரீதரசிங்.
திரு. பொ. திருச்செல்வம்.
திரு. சி. சண்முகரத்தினம்.
திரு. ந. விஸ்வநாதன்.
திரு. த. இலங்கைநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறை இடைவெளி —
# சமூக உளவியல் நிலைப்பட்ட நோக்கு

கலாநிதி சபா. ஜெயராசா
விரிவுரையாளர்
கல்வியியற்புலம் / துறை
யாழ். பல்கலைக்கழகம்

இளைஞர்களும் முதியவர்களும் கருத்து, செயல், ஆகியவற்றில் இசைவு கொள்ள முடியாத அல்லது இணக்கம் காணமுடியாத 'வீச்சு'' தலைமுறை இடைவெளி என்று பொதுவாகக் கொள்ளப்படும். தலைமுறை இடைவெளி என்பது சமூக வளர்ச்சி என்ற தொடர் சங்கிலியின் பாரிய முரண்பாடு என்று கொள்ள முடியாவிடினும் புதுமை, பழைமை என்பவற்றுக்கிடையே ஏற்படும் இணக்கமும் பிணக்கும் தலைமுறை இடைவெளியோடு இணைந்து நிற்கும்

இன்றைய காலகட்டத்தில் தலைமுறை இடைவெளி என்பது உறுத்தும் ஒரு சமுகத் தோற்றப்பாடாக வெளிக் கிளம்பியுள்ளமை சமூக பொருளாதார ஆக்கங்களோடு தொடர்பு கொண்ட நிகழ்வாகும். குறித்துரைக்கத்தக்க சில நிகழ்வுகள் வருமாறு:

(அ) பொருளாதார விருத்தி போதியளவு தொழில் வாய்ப்புக்களைப் பெருக்க முடியாதிருந்தமை; எதிர்காலம் பற்றிய கற்பனைகளாலே தூண்டப் பெற்றிருந்த இளைஞர்களிடத்து மனமுறிவுகளை ஏற்படுத்தின.

(ஆ) பொருளாதார உற்பத்தி முறையின் சுழற்சியிலே முதியோர் ஒரு விதத்திலே தப்பிவிட்டவர்களாகவும், இளைஞர்கள் பொறிகளுக்குள் அகப்பட்டுக் கொண்டவர்களாகவும் இருக்கும் சூழமைவு தோன்றியமை.

(இ) கல்வி உலகுக்கும் வேலை உலகுக்கு மிடையே ஒவ்வாத இடைவெளி விரிவடைந்து வந்தமை.

(ஈ) பள்ளிக்கூட வாழ்க்கை அதிதீவிரமான தெரிவுக்கும், போட்டிக்கும்: தூக்கி வெளிவீசி விடுகின்ற விசைகளுக்கும் இடமளிக்கக் கூடியவாறு ஒழுங்கமைவு பெற்றமை.

(உ) வாழ்க்கையுடன் இசைவுபட வைக்காத பொறிமுறையான கலைத்திட்ட ஏற்பாடுகள் இளைஞர்களிடத்து மனவெழுச்சி சார்ந்த சுமைச் சுல்களை ஏற்படுத்தியமை.

(ஊ) மாறிவரும் சமுக நிலைமைகளுக்கேற்றவாறு மாணவர்களை உள்வாங்கவும் உருவாக்கவும் முன்றும் நிலைக்கலவி ஏற்பாடுகள் முழுவீச்சிலே செயற்படாது நின்றமை.

(எ) வருமானப் பகிர்வு, வளப் பகிர்வு, என்பவை சமுக நீதிக்கு முரண்படும்வகையில் இருக்கும் பொழுது, முதியோரிலும் இளைஞர்களே கூடிய மனவெழுச்சித் தாக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், உள முரண்பாடுகளுக்கும் உள்ளாகின்றனர்.

இவ்வாறான பின்புலத்தில் இளைஞர்களின் உடல், உள்ள, மன வெழுச்சி வலுக்கள் வினையாற்றலுடன் தொழிற்படும் பொழுது ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்ட பண்பாட்டு விழுமியங்களுடன் மோத அல்லது முரண்பட நேரிடுகின்றது.

பண்பாட்டைப் பாதுகாத்தலிலும், அவற்றைப் புதிய தலைமுறையினரிடத்து உட்புகுத்துவதிலும் எத்தகைய ஒரு சமுகத்திலும் முதியோர்கள் பிரதான பணிக்கூறுகளை ஏற்று வந்துள்ளனர் தமிழ்ச் சமுதாயத்திலே காணப்படும் பாரம்பரியமான சடங்கு முறைகளை ஆராயும் பொழுது ஒப்பீட்டளவில் முதியோருக்கே முதன்மை இடங்கள் தரப்பட்டுள்ளன. நிறுவனமாக்கப்பட்ட எத்தகைய ஒரு பண்பாடும் ஒழுங்கு பிறழாது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய "ஆழ்ந்த வேர்களை" வைத்திருக்கும் பொழுது அதில் முதியவர்களுக்குரிய பண்புக் கூறுகள் அதிகமாகவும் பரவலாகவும் ஒப்படைக்கப்பட்டிருக்கும். இதனால் "புதுமைகள்" பற்றிய கருத்துக்கள் முதியோரிடத்து அதிகதூரம் எடுபட முடியாததாயிருக்கும்.

பண்பாடு நிலைபேறு கொள்வதற்கு ஒருவித "வலுப்பிரயோகம்" இன்றியமையாததாகும். இவ்வாறான வலுப்பிரயோகம் சமுக அடுக்கமைப்பு, சமுக நிறுவனங்கள் என்பவற்றால் மாத்திரமன்றி முதியோராலும், இளைஞர்களிடத்துச் செலுத்தப்படுகின்றன. வலுப்பிரயோகம் என்பது விரிந்த பொருள் கொண்டது. நடத்தைகளை மீள வலியுறுத்தல், விழுமியங்களைக் கடைப்பிடிப்பதால், சொத்துக்களைப் பகிர்தல், என்றவாறு பரந்த சமுகச் செயல் முறையினூடாக வலுப்பிரயோகம் நிகழும். சமுக நம்பிக்கைகள், சடங்குகள் முதலியனவும் வலுப்பிரயோகத்திலே பங்கு கொள்ளும்.

காலனித்துவ நாடுகளின் கல்வி முறை இருதுருவப்பட்டு நின்றமை போலோ பிறிறி போன்ற ஆய்வாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இரு துருவப்பட்டு நிற்றல் என்பதன் பொருள் யாது? ஒடுக்குவோருக்குச் சாதகமானதாயும், ஒடுக்கப்படுவோருக்குப் பாதகமாகவும் அமையும் கல்வி முறையே இருதுருவப்பட்ட கல்வி முறையாகும். இத்தகைய காலனித்துவக் கல்வி முறையானது மேலும் ஒருபடி முன்னேறி, இளைஞர்களின் சமுகம் சார்ந்த எழுச்சிகளை மழுங்கடித்தும், அதேவேளை ஓர் உத்தியோகம் பெறுவதன் வாயிலாக இளைஞரை சமுக உணர்வுகளில் இருந்து அந்நியப்படுத்தி விடுவதாகவும் அமைந்தது.

மூன்றும் உலக நாடுகளில் மாத்திரமன்றி ஐக்கிய அமெரிக்காவிலும், அங்குள்ள சூழமைவுகளில் இளைஞர்கள் அந்நியமாதல் கண்டறியப்பட்டுள்ளது. (டானியல் யன்கிலோவிச், 1974)

சமுக அடுக்கமைப்போடு அங்குள்ள இளைஞர்களிடத்து வேறுபட்ட பண்புக் கூறுகள் தொடர்புபட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. சமூக நிறுவனங்கள் என்ற நிலையான அமைப்புக்களிலிருந்து இளைஞர்கள் தம்மைப் பிரித்துக் கொள்ளும் வேட்கையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். தாம் செய்யும் தொழில்களிலே திருப்தி பெற முடியாத நிலை இளைஞர்களிடம் புரையோடியுள்ளது. பாலியல் தொடர்பான பாரம்பரிய நியமங்களில் இருந்து விடுபடும் விலகற் போக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இவற்றோடு பிறிதொரு பண்பு நிலையான மாற்றமும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கீழைத்தேய அநுபூதி அனுபவங்கள், தியானம், முதலியனவும் ஒரு சில இளைஞர்களின் ஈர்ப்பு விசைகளாக அமைந்துள்ளன.

உலக நிலைவரங்களைப் பார்க்கும்பொழுது நீதிக்கும் சமத்துவத்துக்குமான குரல் எழுப்புதலில் சாதுநிலை நீங்கிய வேகம் இளைஞர்களிடத்துக் காணப்படுகின்றது. முதியோரிடத்து புலன்தரிசனத்தில் உள்ள விடுதலை தொடர்பான உணர்வுகள் இளைஞர்களிடத்து உடலியக்க விசைகளோடு இணைந்த செயல் விளைவுகளாக மாறுதல் தலைமுறை இடைவெளியின் இயங்குநிலை வெளிப்பாடுகளாக உள்ளன.

தலைமுறை இடைவெளியுடன் தொடர்புடைய பிறிதோர் இடர் இளைஞர் எதிர்நோக்கும் உள நெருக்கடிகளாகும். மனவெழுச்சி தொடர்பான குழப்ப நிலைகள் பல்வேறு சூழற்பண்புகளால் உருவாக்கப்படுகின்றன.

இச்சந்தர்ப்பத்திற் "சமூகப் பெயர்ச்சிகள்" பற்றி அறிதல் இன்றியமையாததாகும். சமூகப் பெயர்ச்சியை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று நிலைக்குத்துப் பெயர்ச்சி; மற்றையது கிடைப் பெயர்ச்சி. கல்வி, தொழில், அந்தஸ்து என்பவற்றால் மேம்பட்டு உயர வேண்டும் என்ற உளப்பதகளிப்பு என்பது நிலைக்குத்தாக உயரும் பெயர்ச்சியுடன் இணைந்தது.

கிடைப் பெயர்ச்சி கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கிப் பெயர்ந்தமையிலிருந்து, நாடுகளை நோக்கிப் பெயருதலாக இன்று இடம்பெற்று வருகின்றது. இந்தக் கிடைப் பெயர்ச்சி விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியுள்ளது. ஆயினும் இவ்வாறான பெயர்ச்சிகள் பல புதிய மனோபாவங்களின் ஆக்கத்துக்கு இடமளித்துள்ளது. கிடைப் பெயர்ச்சியினால் கிடைத்த பொருளாதார அனுகூலங்கள் பாரம்பரியமான சொத்துக்கள் நிலம் என்பவற்றுக்குரிய பணவடிவான கேள்வியை எமது சூழலில் அதிகரிக்கச் செய்தவேளை உற்பத்தித்திறன் ஆக்கங்களுக்குரிய உட்பாய்ச்சல்களை விருத்தி செய்யாமை, இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களை மேலும் சிக்கலாக்கி வருகின்றன.

தாய் தந்தையர்க்கிருந்த எதிர்பார்ப்புக்களைவிட இளைஞர்களுக்குரிய எதிர்பார்ப்புக்களின் சிக்கல் தன்மையின் செறிவானது உளவியல் நிலைப்பட்ட தாக்கங்களை மேலும் தூண்டிவிடுகின்றது. இளைஞர்கள் அனைவரும் ஒரே பண்பாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்களைக் கொண்டவர்கள் அல்லர். பல்வேறு விதமான சமூக பொருளாதார பண்பாட்டுத் தாக்கங்களினுல் பிரதி கூலமடைந்த இளைஞர்கள் இருக்கின்றுர்கள். அவர்களிடையே பல்வேறு வகைப்பட்ட துணைப் பண்பாட்டுக் கோலங்கள் உள்ளன.

முரணியல்புகளுக்கு மத்தியில் 'அக்ரிவிசிம்' எனப்படும் செயலூட்ட வாதம், 'றடிக்கலிசம்' எனப்படும் தளம் மாற்று வாதம், ':.பண்டமென்ரலிசம்' எனப்படும் அடிப்படைவாதம் முதலியவை இளைஞர்களிடத்து மேலோங்கியிருத்தலும் உலக அரங்கிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன சோம்பியிராது செயல்வடிவான ஆக்கங்களைக் காட்ட வேண்டுமென்பது செயலூட்டவாதத்தால் விளக்கப்படும். ஏற்கனவேயுள்ள அமைப்புக்களை நிராகரிப்பது தளம் மாற்று வாதம் எனப்படும். அடிப்படைவாதம் என்பது சமயங்களோடு இணைந்து சமயக்கோட்பாடுகளையும் ஆசாரங்களையும் ஐயத்துக்கிடமின்றித் தழுவி நிற்க வேண்டுமென்பதை ஆழவற்புறுத்துகினறது. சமய அடிப்படை வாதம் சில பண்பாடுகளிலே இன்று தீவிர வளர்ச்சியுற்றுள்ளது.

செயலூட்ட வாதம் என்பது ஆக்கச் செயலூட்டவாதமாகச் சில நாடுகளில் வளர்ச்சி பெற்றுவந்துள்ளது. சமூகத்தின் மேம்பாட்டுக்காக முதியோரின் பங்களிப்பிலும் பார்க்க மேம்பட்ட பணியை வழங்கும் பொழுது, ஆக்கச் செயலூட்டத்தின் வழியாகத் தலைமுறை இடைவெளி துலக்க மடைந்து கொண்டு வருகின்றது.

தலைமுறை இடைவெளிபற்றி விளக்க வந்த ஆய்வாளர்கள் பழைய பண்பாடு, மாற்றுப்பண்பாடு ஆகிய எண்ணக் கருக்களை முன்மொழிந்துள்ளனர். சால்ரர் (1970) அவற்றின் வேறுபாடுகளை உணர்ச்சி வசப்பட்ட முறையில் பின்வருமாறு விளக்குகின்றுர்:- தெரிவு வற்புறுத்தப்படும்பொழுது பழைய பண்பாட்டினர் தனிமனித உரிமைகளிலும் பார்க்க சொத்துரிமைக்கு முன்னுரிமை அளிக்கின்றனர்; - மனிதத் தேவைகளிலும் பார்க்க தொழில் நுட்பவியல் தேவைகளை மேலானதாக எண்ணுகின்றனர். கூட்டுறவைக் காட்டிலும் போட்டியை நாடுகின்றனர்—பங்கிட்டுக் கொடுப்பதைக் காட்டிலும் குவித்து வைப்பதை மேலானதாகக் கருதுகின்றனர்-வழங்குவோராயிராது, அருந்தற்படுவோராயிருக்கின்றனர் — இவ்வாருக விரித்துரைக்கத்தக்க பழைய பண்பாட்டை மாற்றியமைப்பதற்கு இளைஞர்களிடையே தோன்றியுள்ள மாற்றுப் பண்பாடு ஆற்றலுடன் கூடிய ஆவலை வெளிப்படுத்துகின்றது.

மாற்றுப் பண்பாட்டினர் அரசியல், சமூகம், பொருளாதாரம் தொடர்பான ஆக்கபூர்வமான செய்திகளை ஐக்கிய அமெரிக்காவில் முன்வைத்தனர். நீக்ரோக்களுக்குப் பரிபூரண சமத்துவம் தரல், நிறைவான வேலைவாய்ப்பு, பணத்தை இல்லாதுஒழித்தல், பணம் செலுத்தி உணவு, உடை, கல்வி, வைத்தியம் பெறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை இலலாமற் செய்தல், புதுவாழ்வு புனர்வாழ்வு முதலிய வற்றை வற்புறுத்தல் ஆகியவை அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

சூழல் பாதுகாக்கப்படல் வேண்டும். சூழலியல் மேம்படுத்தப்படல் வேண்டும். சமூகத்துக்கும் கல்வி நிலையங்களுக்குமிடையேயுள்ள தடைகள் உடைக்கப்படல் வேண்டும். தகவல் சாதனங்களை யாரும் இலவசமாகப் பயன்படுத்தும் ஏற்பாடுகள் வளர வேண்டும். கலைகளும் ஆக்கத் திறன் களும் வளர்க்கப்படல வேண்டும் என்ற ஆதர்சங்கள் மாற்றுப் பண்பாட்டினரால் முன்வைக்கப்பட்டன.

தலைமுறை இடைவெளியை இசைவடிவிற் காட்டும் ஒரு சாதனமாக "றொக்" இசை அமைகின்றது. அது ஒரு நிறுவன அமைப்பாக நின்று இளைஞர்களின் சீராக்கங்களுக்கு இடமளிக்கின்றது. அவர்கள் சுதந்திரத்தை முழு அளவிலே வெளியிடுவதற்குரிய தெரிவை வழங்குகின்றது. நமது நாட்டுச் சூழலில் இளைய தலைமுறையினர் எழுத்தாக்க வடிவமாக இருப்பது "புதுக் கவிதை" என்ற அமைப்பாகும். யாப்பு இலக்கணம் அறிந்து செய்யுள் யாத்தல் முதியோரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட இலக்கிய முறைமையாக அமைய, புதிய தலைமுறையினர் கட்டற்ற கவிதையாக்கங்களிலே தீவிர ஈடுபாடு காட்டுகின்றனர். யாரும் எழுதலாம் என்ற நுழைவுச் சுதந்திரம், பாரம்பரிய கட்டமைப்புக்களை மீறலாம் என்ற வெளிப்பாட்டுச் சுதந்திரம் முதலியவை புதுக்கவிதை எழுத்தாக்கங்களை இளைஞர் மத்தியிலே புகழுடையச் செய்துள்ளன.

கல்வி நிறுவன அமைப்புக்களிலே கீழ்ப்படிந்து நடத்தலும், இட்டதைச் செய்தலும், சித்திரப் பதுமை போன்றிருந்து படித்தலும், பழைய தலைமுறையினரது விழுமியங்களாகக் காணப்பட்டன. புதிய தலைமுறையினர் கல்வி நிறுவனங்களில் விமர்சனங்களை, மீளாய்வுகளை வளர்த்துக் கொள்ளும் இயல்புடையோராய்க் காணப்படுகின்றனர். இன்றைய தலைமுறையினரது ஆசிரியத்துவம் பற்றிய எண்ணக்கருவும் புதிய நிலைமைகளுக்கு இயைந்தாற்போல் உருவாக்கப்படுகின்றது. இந்த யதார்த்தங்களை விளங்கிக் கொள்வதன் வாயிலாகவே இளைஞர்களைப் புரிந்து கொள்ள முடியும்.

பாடப் பொருள்களைப் பொறுத்த வரையிலும் தமக்குப் பொருந்தாத வற்றை விமர்சிக்கும் திறன் சமகால இளைஞர்களிடத்துக் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்றுவரும் அறிவுப் பெருக்கம் இளைஞர்களைக் கூடுதலாகத் தாக்கும் பொழுது அவர்கள் முன்னைய தலைமுறையினரிலும் பார்க்க வேறுபட்ட முறையிலே சிந்திப்பதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. கல்வி மொழி தொடர்பாக இலங்கையில் நிலவும் கருத்து வேறுபாடுகளை இங்கு தொடர்பு படுத்த முடியும். தாய்மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்து



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக உத்வேகத்துடன் இளைஞரிடம் ஊடுருவியுள்ளது. ஆங்கிலம் கல்வி மொழியாக இருந்தால் பல அனுகூலங்கள் உண்டு என்ற கருத்து பெருமளவில் முதியோரிடம் நிலவி வருகின்றது.

தலைமுறை இடைவெளி தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆய்வு முறையின் முக்கியத்துவம் இங்கு எடுத்துக் கூறப்பட வேண்டியுள்ளது.

சமூக இயங்கியலின் பின்புலத்தில் வைத்து இந்த நிகழ்வுகளை நோக்காவிடில், உதிரியான கருத்துக்களையே கூறவேண்டிவரும். சில சந்தர்ப்பங்களில் சமூகத்தின் மிகப் பெரிய முரண்பாடாகிய வர்க்கமுரண்பாட்டை மறைப்பதற்கும், இலக்குகளைத்திசை திருப்பி விடுவதற்கும் தலைமுறை இடைவெளி புலக்காட்சியை ஏற்படுத்திவிடும்

இளைஞர்களும் முதியோரும் கருத்து ஒற்றுமைப்படும் சந்தர்ப்பங்களும் நிகழ்வுகளும், பல உண்டு. அந் நிலைமைகளில் "தலைமுறை இடைவெளி" என்ற எண்ணக்கரு செயலிழந்து விடுகின்றது. வர்க்கம் சார் அனுபவங்கள், காலனித்துவ ஒடுக்குமுறை, தேசிய இனங்கள் சார்ந்த உணர்வுகள் முதலியவை இளைஞர்களையும் முதியோரையும் ஒன்றுபட வைக்கின்றன. இச் சந்தர்ப்பங்களில் தலைமுறை இடை வெளிக்குப் பதிலாக வேறுபல இடைவெளிகளைச் சமூகம் தரிசிக்க நேரிடும்.

பொதுவாக எமது நாட்டின் குடித் தொகையின் வயதுத் தொகுதிகளின் அமைப்பு "கூம்பக" வடிவமாகவே காணப்படுகின்றது. அதாவது வயது முதிர்ந்தோர் எண்ணிக்கையிற் குறைவாகவும், வயது குறைந்தோர் எண்ணிக்கையிற் கூடுதலாகவும் காணப்படுகின்றனர். உழைப்போரிலும் பார்க்க, சார்ந்திருப்போரின் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுகின்றது. பாரம்பரிய விழுமியங்கள் மேற்கு நாடுகளில் கைத்தொழிற் புரட்சியால் மாற்றப்பட்டமை போன்ற விழுமிய உடைவுகள் எமது நாட்டில் நிகழவில்லை, குடும்பம் என்ற சமூக அலகு மேலும் வீரியத்துடன் மீளவலியுறுத்தப்பட்டு வரும் பின்புலத்தில் தலைமுறை இடைவெளி என்பது பொருண்மை கொண்ட வலுவாக இருக்க முடியுமா என்ற கேள்வி எழலாம்.

---

## ஆய்ந்த நூல்கள்:


1. *Prem Kirpal (1976)* **Youth and Established culture,** *New Delhi.*
2. *UNESCO (1981)* **Youth in the 1980s.** *Paris*
3. *J. F. Adams (1973)* **Human Behavior in changing society,** *Boston.*
4. *Derek Miller (1969)* **The Age Between** *London.*
5. *Edward Seidman (ed) (1986)* **Redefining Social Problems.** *London.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் — ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

பேராசிரியர் வி. சிவசாமி

யாழ்ப்பாணக் குடாநாடு போன்று அதனை அடுத்துள்ள தீவுகளும் நீண்டகால வரலாறு கொண்டவை. இவற்றுள் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவதீவு, வேலணைத்தீவு (லைடன் தீவு), மண்டைதீவு ஆகிய சப்த தீவுகளும் நன்கு குறிப்பிடற்பாலன. புவியியல் ரீதியிலும், வரலாற்று ரீதியிலும் இவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒன்றிணைந்த பகுதிகளாயினும், இவற்றிற்குத் தனிச்சிறப்புகளும் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியான வரலாற்றினைக் கூறும் இலக்கிய மூலங்களோ அல்லது வாய்மொழி மரபுகளோ வேறு மூலங்களோ இல்லை. எனினும், சில ஐதீகங்களும், மரபுகளும் உள்ளன. புராதன இலங்கை வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியனவும் பௌத்த ஜாதகக் கதைகள், மணிமேகலை, நம்பொத்த, கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை, முதலிய இலக்கிய மூலங்களும், சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள், இடப்பெயர்கள், சில வாய்மொழி மரபுகளும் பிறவும் தீவக வரலாறு பற்றி அறிய ஓரளவு உதவுகின்றன. இவற்றைவிடப் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் முதலியோரின் ஆட்சிக் காலம் பற்றியறிவதற்கு அவரவர் கால ஆவணங்களும், குறிப்புகளும், கோட்டைகளும், தேவாலயங்களும் உள்ளன. எனினும் போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் பின்பற்றிய தீவிர சமயக் கொள்கையினால் இவ்விடங்களிலிருந்த பிறமத-குறிப்பாக இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. சிலவற்றிலிருந்த ஒருசில வழிபாட்டுப் பொருட்களும், வேறு சிலவும் கிடைத்துள்ளன. முறையான மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளும் நடத்தப்படின் தீவகத்தின் புராதன வரலாறு பற்றிய பல தகவல்கள் கிடைக்கலாம். எவ்வாறாயினும், வரலாற்று மரபுகள் பேணப்படாமை பெரிய குறைபாடேயாகும்.

வரலாற்று ரீதியிலே நோக்கும்போது, யாழ்ப்பாணக்குடா நாட்டிற்போன்று, இவற்றிலும் கிறித்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு மக்களின் நடமாட்டங்கள் நிலவி வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இத்தீவுகள் அமைந்திருக்கும் நிலையம் இவ்விடங்களிலே குடியேறிய மக்களைப்பற்றியறிய ஓரளவாவது உதவும். இவை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மிக அண்மையிலுள்ளன. அதேவேளையில் இவற்றிற்குத் தென்கிழக்குத்திசையில் உள்ள பூநகரிப் பிராந்தியமும் இவற்றுடன் ஓரளவாவது தொடர்புள்ளது. அதேவேளையில் மேற்கு, வடமேற்குத் திசையிலுள்ள தென்னிந்தியா குறிப்பாகத் தமிழ்நாடு சற்றுத் தொலைவில் உள்ளது. எனவே, ஒரு புறத்தில் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா முதலிய மாநிலங்களிலிருந்து காலம் தோறும் மக்கள் சிலர் வர்த்தகம், மீன்பிடித்தல், புதிய நாடுகளுக்குச் செல்லும் ஆர்வம் முதலிய காரணங்களாலும், பல்லவ, பாண்டிய, சோழ, பாண்டிய, விஜயநகரப் பேரரசுகளின் ஆதிக்கப் படர்ச்சியினைத் தொடர்ந்தும் இவ்விடங்களிலே வந்து குடியேறியிருப்பர். இப்புலப்பெயர்ச்சிகளிலே தமிழ்நாடுதான் பிரதான இடம் வகித்து வந்துள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இங்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றிக் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகியன குறிப்பிடுகையில், யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகாராசாவின் வேண்டுகோளின்படி செய்யூர் இரு மரபும் துய்யதனி நாயகன் எனும் வேளாளன் நெடுந்தீவிலே குடியிருத்தப்பட்டான் எனக் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள பிரதான தீவுகளில் தமிழகத்திற்கு அண்மையிலுள்ளது நெடுந்தீவாகும். எனவே, தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்த மக்களில் ஒரு சாரார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் மற்றைய தீவுகளுக்கும், குடாநாட்டிலும் குடியேறியிருப்பர். அதே வேளையில் ஒரு சாரார் இத்தீவுகளுக்குத் தென் கிழக்கேயுள்ள பூநகரிப் பிராந்தியத்திலும் குடியேறியிருப்பர் அல்லது அங்கிருந்து இங்கு வந்திருப்பர் என்பது அண்மையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரத்தினம் பூநகரியிலே மேற்கொண்டிருக்கும் ஆய்வுகளாலும் புலப்படுகின்றது. தமிழ்நாட்டிலிருந்து தீவகத்திற்கும், குடா நாட்டிற்கும் புலம் பெயர்ந்த மக்கட் புலப்பெயர்ச்சியின் ஓர் அலையெனக் குறிப்பிட்ட தனிநாயகன் பற்றிய கதையினைக் கொள்ளலாம். இதுபோன்று, இதற்கு முன்னரும், பின்னரும் மக்கட்புலப் பெயர்ச்சிகள் தீவகத்திலும், குடாநாட்டிலும், பூநகரியிலும் ஏற்பட்டிருக்கலாம். சில புலப் பெயர்ச்சிகள் நேரடியாகவே தமிழகத்திலிருந்து தீவகத்திலேற்பட்டிருக்கலாம். வேறு சில குடாநாட்டிலேற்பட்டுப் பின் தீவகத்திலேற்பட்டிருக்கலாம்; இன்னும் சில பூநகரியிலேற்பட்டுப் பின் தீவகத்திலேற்பட்டிருக்கலாம். பொதுவாகப் புலப் பெயர்ச்சிகள் தீவகத்திலே நேரடியாகவே ஏற்பட்டிருக்கலாம். பின் வசதிகளையும், தொழில்களையும் நாடிப் பலர் குடாநாட்டிற்கும், ஒரு சாரார் பூநகரிக்கும் சென்றிருப்பர்.

தீவகத்திலுள்ள சில தூய தமிழ்ப் பெயர்கள், வழக்காறுகள், சில ஐதிகங்கள் மேற்குறிப்பிட்ட தொடர்புகளை நினைவூட்டுவன. தீவகத்திலே வாழும் மக்களிடையிலே பரஸ்பர உறவுகள் தொடர்ந்து நிலவுகின்றன. அதே வேளையில் ஒரு சாரார் பல காரணங்களுக்காகக் குடாநாட்டிற்குச் சென்று குடியேறுகின்றனர். ஒரு சாரார் பூநகரிப்பகுதிக்கும் சென்றுள்ளனர்.

மேலும் தீவகத்தின் நிலையம் இலங்கை குறிப்பாக வடஇலங்கை, அயலிலுள்ள இந்தியாவுடனும், கிழக்கிலும், மேற்கிலும் உள்ள தூர நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளிலே – வர்த்தக கலாச்சாரத் தொடர்புகளிலே – இந்திய வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகளிலே முக்கியத்துவம் பெற்றுவந்துள்ளது. மேலும், மேற்கே புராதன காலத்திலே நிலவிய கிரேக்க, ரோமப் பேரரசு வர்த்தகத் தொடர்புகளும், பின் ஏற்பட்ட அராபிய, பாரசீகத் தொடர்புகளும், வடகிழக்கிலும், கிழக்கிலுமேற்பட்ட பர்மிய, மலேசிய, இந்தோனேசிய குறிப்பாகச் சீன வர்த்தகத் தொடர்புகளும் குறிப்பிடற்பாலன. தீவகத்திலுள்ள ஊர்காவற்றுறை, மாவலித்துறை, பெரியதுறை, குறிகாட்டுவான், புளியடித்துறை, கழுதைப்பிட்டி, சாட்டி, காரைநகர், களபூமியிலுள்ள துறைமுகம், நயினாதீவு துறைமுகம், அனலைதீவு, எழுவதீவு மண்டைதீவு முதலியனவற்றிலுள்ள துறைமுகங்களும் குறிப்பிடற்பாலன. இவற்றுள்ளே ஊர்காவற்றுறை (ஊராத்துறை) நெடுங்காலமாகப் பிரசித்தி பெற்றிருந்த துறைமுகமாகும். கி. பி, 12-ம் நூற்றுண்டுச் சோழப் பெருமன்னனின் கல்வெட்டிலும், குறிப்பாக, ஊர்காவற்றுறையிலே பொறிக்கப்பட்டதும், தற்போது நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளதுமான கி. பி.12-ம் நூற்றுண்டினைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டும் குறிப்பிடற்பாலன. பின்னைய கல்வெட்டின்படி பல நாடுகளிலுமிருந்து கப்பல்கள் ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்கு வந்து சென்றமையும், அவற்றின் சொந்தக்காரர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதுபற்றியுமான வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய சில அரிய செய்திகள் கிடைத்துள்ளன. இது பெரும்பாலும் முதலாம் பராக்கிரமபாகு காலத்தியதாகும். ஆனால் இது தமிழிலுள்ளபடியால் இங்கு வாழ்ந்த மக்களும், வர்த்தகத்திலீடுபட்ட பலரும் தமிழர் என்பதும் தெளிவு, இக்கல்வெட்டின் ஒருபகுதி கிடையாமை துரதிஷ்டமே.

தீவகத்திலுள்ள சில இடப்பெயர்கள் குடா நாட்டிலும், தென்மராட்சி, பூநகரிப் பகுதியிலும் உள்ளன. எடுத்துக்காட்டாக, இறுப்பிட்டி, மூத்த நயினாபுலம், உயரப்புலம், வழுக்கியாறு போன்றவை குடாநாட்டிலும், மணற்காடு, கிராஞ்சி, கேரதீவு போன்றவை பூநகரி, தென்மராட்சி ஆகியவற்றிலும் உள்ளன. இவ்விடப் பெயர்கள் மக்களின் புலப் பெயர்ச்சியினையும் எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவன. இலங்கையின் பிற இடங்களிற் போன்றே தீவுகளிலும் வரலாற்று வெளிச்சம் பெருங்கற்பண்பாட்டுடன் தொடங்கிற்று எனலாம். பெருங்கற்பண்பாடு தீபகற்ப இந்தியாவிலே சுமார் கி. மு. 1000 தொடக்கம் கி. பி. 500 வரை நிலவிற்று. இப் பண்பாட்டு மக்கள் திராவிடர் ஆவர். இலங்கையில் இப்பண்பாடு கிறித்துவுக்கு முற்பட்ட, பிற்பட்ட சில நூற்றாண்டு களிலே நிலவிற்று. ஒழுங்கான அகழ்வாய்வு கள், மேலாய்வுகள் கூட சில பிரதான இடங்களிலே இன்னும் நடைபெற்றில. தீவகத்திலே காரைநகர், வேலணைத்தீவு, புங்குடுதீவு, முதலிய இடங்களிலே பெருங் கற்பண்பாட்டுச் சின்னங்கள் சில கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஏனைய நெடுந்தீவு, நயினாதீவு, அனலதீவு, மண்டைதீவு முதலிய இடங்களிலுமிவை கிடைக்கக் கூடிய சாத் தியக் கூறுகள் உள்ளன.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாக யக்ஷர், நாகர் என்போர் பற்றித் தீபவம் சம், மகாவம்சம் முதலிய நூல்கள் கூறு கின்றன. இவர்களில் யக்ஷர் ஆதி – ஒஸ்ர லோயிட் இனத்தவர் எனவும், நாகர் திரா விடர் எனவும் வரலாற்றசிரியர் பொது வாகக் கருதுவர். இந்நாகர் பெரும்பாலும் வட இலங்கையிலே வாழ்ந்தனர். இவர்க ளிடையே நாக வழிபாடு பிரபல்யமாக விளங்கி வந்துள்ளது. நாகம்மாள் (நாக பூஷணியம்மன்) நாகதம்பிரான் கோவில்கள் தீவகத்திலே, குறிப்பாக நயினாதீவு, அனல தீவு புங்குடுதீவு முதலிய இடங்களில் பிர பல்யமாக உள்ளன. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் மிகப் பிரசித்தி பெற்ற தாகும். நாக, நயினா எனும் பதங்கள் பாம்பு எனும் பொருள்படும். நாகவழிபாடு இன்றும் இப்பகுதியிலே பிரபல்யமாக உள்ளது. புராதனநாகர் மத்தியில் இவ் வழிபாடு நன்கு நிலவிற்று. வையாபாடல் எனும் நூல் 'நாக நயினார்தீவு' எனக் குறிப்பிட்டிருப்பது கவனித்தற்பாலது.

பெருங்கற்பண்பாட்டு மக்கள் மத்தி யிலே ஆதி இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவின. எனவே, புராதன தீவகத்திலே வாழ்ந்த திராவிடர் குறிப்பாகத் தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நிலவியிருக்கலாம்.

இதைத் தொடர்ந்து பிற இடங்களிற் போன்று தீவகத்திலும் பௌத்தம் நிலவி யிருக்கலாம். புராதன இலங்கைப் பௌத்த மரபிலே நாகதீப – குறிப்பாக நயினாதீவு ஒரு முக்கியமான பௌத்த நிலையமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு புத்தபெருமானே எழுந்தருளியதாகவும் கூறப்படுகிறது. இதை விடப் பியங்குதீப என ஒரு சாரார் கருதும் புங்குடுதீவும், காரைதீவும் (காரைநகர்) பௌத்த புனித இடங்களாகக் கூறப்பட் டுள்ளன. அதே வேளையிலே தமிழ் நாட் டுப் பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மணிமேகலையிலே கூறப் படும் மணிபல்லவம், நயினாதீவு எனப் பொதுவாக அடையாளம் காணப்படுகின் றது. மணிமேகலை, ஆபுத்திரன், அக்ஷய பாத்திரம் பற்றிய ஐதீகங்கள் இன்றும் நயினாதீவில் உள்ளன. எனவே, தென்னிந் திய, இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத் திலும் சங்கமித்துள்ளன எனலாம். அக் காலகட்டத்தில் வாழ்ந்த பௌத்தர்களிற் பலர் தமிழர் எனலாம். இந்தியாவிற் போன்றும், இலங்கையின் பிற இடங்களிற் போன்றும், தீவகத்திலும் இந்து சமயமும், பௌத்தமும் அக்கம் பக்கமாக நிலவியிருக் கலாம்.

நயினாதீவு எனும் பெயர் நயினாபட்டர் எனும் பிராமணர், தமிழ் நாட்டிலிருந்து வந்து இங்கு குடியேறியதைத் தொடர்ந்து இத்தீவுக்கு இடப்பட்ட பெயரென ஒரு சாரார் கருதுவர். இவரே இங்கிருந்த நாக தம்பிரான் கோவிலின் முதல் அர்ச்சகர் எனவும் கூறப்படுகிறது. நயினார் எனும் மக்கட்குழுவினர் இங்குவந்து குடியேறிய தாலும் இப் பெயர் வந்திருக்கலாமெனச் சிலர் கூறுகின்றனர். நாகவழிபாடு (நயினா– பாம்பு) நிலவியதாலும் இப்பெயர் இடப் பட்டிருக்கலாம். இங்கு பிராமணர் பலர் வாழ்ந்தமையால் இது பிராமணத்தீவு என வும் அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன காலத்தீவகத்திலே நிலவிய ஆட்சிமுறை பற்றியும் அறியமுடியாதுள்ளது. எனினும் சில குறு நிலத் தலைவர்கள் இவற்றில் ஒன்றில் அல்லது பலவற்றில் ஆதிக்கம் செலுத்தியிருப்பர். இவர்கள் சுதந்திரமாகவோ அல்லது பொதுவாக யாழ்ப்பாண அரசர் அல்லது அநுராதபுர மன்னரின் கீழ் நிருவாகம் நடத்திய தேசாதிபதியின் கீழ் நிருவாகத்தினைக் கவனித்திருப்பர். இது ஒரு தனி நிருவாகப் பகுதியாகவும் இருந்திருக்கலாம். குளக்கோட்ட மகாராசன், வெடியரசன்பற்றிய கதைகள் நெடுந்தீவிலும், காரைதீவிலும், அல்லிராணி பற்றிய கதைகள் அல்லைப்பிட்டியிலும் நிலவி வந்துள்ளன. இவை நன்கு ஆராயப்பட வேண்டியவை.

தமிழகத்திலே பல்லவர் – பாண்டியர் காலத்திலேற்பட்ட ஆதிக்கப்படர்ச்சி, சைவ வைணவ மறுமலர்ச்சி முதலியனவற்றின் தாக்கம் தீவகத்திலும் ஏற்பட்டிருக்கலாம். அக்காலத்திய மறுமலர்ச்சியின் விளைவாகத் தமிழகத்திலே பௌத்தம், சமணம் செல்வாக்கிழந்தமை போலத் தீவகத்திலும் காலப்போக்கிலே பௌத்தம் மறைந்திருக்கலாம். கி. பி. 10-ம் நூற்றாண்டிலேற்பட்ட சோழப் பேரரசு அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை முழுவதையும் அடிப்படுத்திற்று தீவகத்திலும் இதன் தாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் சில கிடைத்துள்ளன. வட இலங்கையினைக் கட்டுப்படுத்தற்குக் கேந்திர நிலையத்திலுள்ள ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்களைக் கட்டுப்படுத்தலும் அவசியமே. இதற்கு அண்மையிலே நாரந்தனையிலுள்ள தான் தோன்றீஸ்வரி ஆலயமுள்ள இடத்திலே சுமார் அரைநூற்றாண்டுக்குமுன் சோழர் கால நாணயங்களும், சிறிய அம்பாள் சிலையும் வேறு பலவும் கிடைத்ததாக அறியப்படுகின்றது. மேலும், தீவகத்திலுள்ள சில இடப்பெயர்கள், இங்கு கிடைத்த சோழ நாணயங்கள் முதலியனவும் சோழத் தொடர்புகளை நினைவூட்டுவன.

கி. பி. 13-ம் நூற்றாண்டிலே சிங்கை நகரை (நல்லூரை)த் தலைநகராகக் கொண்டு எழுச்சி பெற்ற யாழ்ப்பாணத் தமிழரசு காலத்திலே தீவக வரலாற்றிலும் புதிய திருப்பம் ஏற்பட்டதெனலாம். இக் காலத்திலே (கி. பி. 13-ம் நூ-1619 வரை) தீவகம் ஒரு தனி நிருவாகப் பிரிவாக யாழ்ப்பாண அரசின்கீழ் இருந்தது. இத்தகைய பிரிவு இதற்கு முன்பும் இருந்திருக்கலாம். ஆனால் இப் பிரிவு, தொடர்ந்து இதனையடுத்துவந்த போர்த்துக்கீச, ஒல்லாந்த, பிரித்தானியர் ஆட்சிக் காலங்களிலும் நிலவிற்று.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, பன்னாட்டு வணிக, சமய, பண்பாட்டுத் தொடர்புகள் தீவகத்திலும் ஏற்பட்டு வந்தன. இந்தியத் தொடர்புகளை விடக் கிரேக்க உரோம, அராபிய, ஜாவக சீனத் தொடர்புகளும் குறிப்பிடற்பாலன பொலந்நறுவ, தம்பதேனிய, கோட்டையரசர்களின் காசுகளும், யாழ்ப்பாண மன்னரின் சேது நாணயங்களும். ஐரோப்பிய ஆட்சியாளரின் நாணயங்களும் இப்பகுதியில் இதுவரை அறியப்பட்டுள்ளன.

சீனத் தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் குறிப்பிடற்பாலன. கி. பி. 10-ம் நூற்றுண்டு தொடக்கம் சில நூற்றுண்டுகளாகச் சீனவர்த்தகம் இலங்கையிலே செழிப்பாக நடைபெற்றது. சுமார் அரை நூற்றுண்டுக்கு முன் நயினதீவிலுள்ள பப்பரவன் சல்லி எனுமிடத்திலே கி. பி. 12-ம் நூற்றுண்டைச் சேர்ந்த சீனச் சாடிகள் கிடைத்தன. இத்தகைய சாடிகள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை முதலிய இடங்களிலும் வெளியே பொலந்நறுவ போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. அல்லைப்பிட்டியிலே சுமார் பத்து ஆண்டுகளின்முன் பேராசிரியர் ஜோன் காஸ்வெல் நடத்திய அகழ்வாய்வின்போது, மேற்குறிப்பிட்ட சீனச்சாடிகள், மட்பாண்டங்கள் முதலியனவற்றின் துண்டுகளும், பிறவும் வெளிவந்தன. அங்கு ஒரு பழைய இந்துக்கோவில் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்துள்ளன.

ஒல்லாந்தர் தமது தாய்நாட்டிலுள்ள சில அம்சங்கள் தீவகத்திலே காணப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியால் இவற்றிற்குத் தமது நாட்டிலுள்ள சில பெயர்களை இட்டனர். காரைநகர் அம்ஸ்ராடம் எனவும், வேலணைத்தீவு லெய்டன் எனவும், அனலதீவு றொட்டர்டாம் எனவும், நயினாதீவு ஹார்லெம் எனவும், புங்குடுதீவு, மிடில்பேர்க் எனவும், நெடுந்தீவு டெல்வ்ற் எனவும் அழைக்கப்பட்டன. இவற்றிலே டெல்வ்ற், லெய்டன் ஆகியன இன்றும் நிலைத்துள்ளன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தொடர்புகளை நினைவூட்டும் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தேவாலயங்கள் சிலவும், குறிப்பாக நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை முதலிய இடங்களிலுள்ள கோட்டைகளும் கவனித்தற்பாலன.

இங்கு வாழும் மக்களிற் பெரும்பாலானோர் இந்துக்களாயினும், கணிசமான தொகை கத்தோலிக்க சமயத்தவரும், சிறிய தொகை புரட்டஸ்தாந்து கிறித்தவரும் ஸ்லாமியரும் உள்ளனர்.

ஊர்காவற்றுறை கப்பல் கட்டும் துறைமுகமாகவும் இருந்து வந்துள்ளது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், காலத்திய தீவகம் பற்றிய சில நம்பகமான செய்திகளும் கிடைத்துள்ளன. தீவகத்திலே விவசாயம், மந்தை வளர்த்தல், மீன் பிடித்தல், வர்த்தகம் முதலிய தொழில்களும், சாயவேர், சிப்பி, சங்கு, மீன், மான், முயல், ஆடு, மாடு, எருமை, குதிரை (நெடுந்தீவில்), பனை, தென்னை முதலிய பொருள் வளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; சிறு பற்றைக் காடுகளும் இருந்தன. காரைதீவிற் கிடைத்த சாயவேரே சிறந்தரகமானதெனக் கூறப்பட்டுள்ளது. பருத்தியும் பயிரிடப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சியின் பிற்பகுதியில், துணிகரமுள்ள சிலர் தென்னிலங்கைக்குச் சென்று வர்த்தகம் செய்யத் தொடங்கினர்; அவர்களிற் சிலர் பிரபல வர்த்தகராயினர். வேறு சிலர் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றனர். இவர்களில் ஒரு சாரார் அவ்விடங்களிலே தங்கிவிட்டனர்; சிலர் திரும்பிவிட்டனர். 1948க்குப்பின் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஒருசாரார் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலிய மாவட்டங்களிலே குடியேறியுள்ளனர். குறிப்பாக 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தினைத் தொடர்ந்து ஒருசாரார் பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, சுவிற்சலாந்து, டென்மார்க், நோர்வே, இங்கிலாந்து, கனடா முதலிய மேற்கு நாடுகளுக்கும், வேறுசிலர் சவுதிஅரேபியா, ஓமான் போன்ற மேற்காசிய நாடுகளுக்கும் சென்றுள்ளனர். மற்றவர்கள் தொடர்ந்து கல்வியாளர்களாகவும், விவசாயிகளாகவும், வர்த்தகர்களாகவும், பிற தொழிலாளிகளாகவும் பணி செய்து வருகின்றார்கள். தீவக மக்களின் வரலாற்றினை நோக்கும்போது ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' எனும் தமிழ் மூதுரைக்கு இவர்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் உள்ளனர். இத்தீவுப்பற்று நீண்டகால வரலாறும், தனித்துவமும் கொண்டதாகும். இப்பகுதிமக்களின் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று முதலியன குறிப்பிடற்பாலன.

---

குறிப்பு: தீவகம் பற்றி விரைவில் வெளிவரவுள்ள தொகுப்பு ஒன்றிற்குக் கட்டுரையாசிரியர் சற்று விரிவாக எழுதியுள்ள கட்டுரையினை இங்கு அவரே சுருக்கி எழுதியுள்ளார். மேலும் அவர் தீவகம் பற்றிய விரிவான நூல் ஒன்றினை எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமேகலை எழுந்த சமய - தத்துவச் சூழல் - சில அவதானிப்புகள்

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர் – தரம் I
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
இலங்கை.

தமிழ் நாட்டின் வரலாற்றிலே கி. பி. 250 — 550 காலப் பகுதி பொதுவாக இருண்டகாலம் என்று கொள்ளப்படுவது. தமிழிலக்கிய வரலாற்றிலே சங்கமருவிய காலம், அறநெறிக்காலம் என்னும் பெயர்களால் இக்காலப்பகுதி வழங்கப்படும். இக் காலப் பகுதியில் எழுந்த நூல்களிலொன்று மணிமேகலை. இது தோன்றிய கால சமய-தத்துவச் சூழல் இங்கு சுருக்கமாக நோக்கப் படுகிறது.

மணிமேகலை ஒரு பௌத்த பேரிலக்கியம்; பௌத்த மதக் கருத்துக்களைப் பிரசாரம் செய்யும் நோக்கில் இயற்றப்பட்டது என்பதை யாவரும் ஒப்புவர். இந்நூல் எழுந்த காலத்திற்கு முன்பின்னாகத்தான் சமணம் சார்ந்த பேரிலக்கியமான சிலப்பதிகாரமும் எந்தச் சமயமும் சாராத பொது அறநூலாகிய திருக்குறளும் பதினெண் கீழ்க் கணக்கின் ஏனைய அறநூல்களும் எழுந்தன என்பது நமது கவனத்துக்குரியது. கீழ்க்கணக்கு அறநூல்களில் நாலடியார், சிவபஞ்சமூலம் முதலிய சில சமணச் சார்பின என்பது யாவரும் அறிந்ததே.

மேற்படி நூல்கள் எழுந்த காலப்பகுதி தமிழரது சிந்தனை வரலாற்றிலே தனிக் கவனத்துக்குரிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்திய நாட்டின் பல்வேறு சமயக் கருத்துக்களும் தத்துவ சிந்தனைகளும் தமிழக மண்ணில் மக்களாதரவைப் பெறுவதற்காக முட்டி மோதிக்கொண்ட சூழலை மேற்படி காலப் பகுதிக்குரிய வரலாற்றுத் தரவுகள் உணர்த்துகின்றன. இதனைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு இதற்கு முற்பட்ட காலமாகிய சங்ககால நிலையைத் தொடர்பு படுத்தி நோக்கி வரலாற்றுப் போக்கை விளங்கிக் கொள்வது அவசியமாகிறது.

சங்ககாலம் எனப்படும் (கி. பி. 250க்கு முற்பட்ட) காலப்பகுதியின் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியச் சான்றுகளூடாக நோக்கும்போது அக்கால மக்கள் வாழ்க்கையில் சமயம் ஒரு இன்றியமையாத அம்சமாக விளங்கியதாகக் கொள்வதற்கில்லை. உலகியல் சார்ந்த ஈடுபாடுகளே (பொருள் —இன்பம் என்பவற்றை எய்தும் நாட்டமே) அன்றைய வாழ்க்கையில் முதன்மைப் பட்டிருந்தன என்பதை அவ்விலக்கியங்கள் உணர்த்திநிற்கின்றன. அயினும் சமயம் சார்ந்த கருத்துக்கள், செயன்முறைகள் என்பன அக்காலத்தில் பயில்நிலையில் இருந்தன என்பதையும் அவ்விலக்கியங்களிற் கண்டுணர முடிகின்றது. தமிழர் பாரம்பரியத்துக்குச் சிறப்பாக உரிய முருகன், கொற்றவை ஆகிய தெய்வங்களும் அனைத்திந்திய வைதிக பாரம்பரியம் சார்ந்த சிவன், திருமால், இந்திரன் முதலிய தெய்வங்களும் அக்காலப் பகுதியில் வழிபடப் பட்டனர். வெறியாட்டு, நடுகல்வழிபாடு என்பவற்றோடு வைதிக முறைப்படியான வேள்வியும் அன்று பயில்நிலையில் இருந்தன. கி. மு நூற்றாண்டுகளுக்குரியனவாகத் தமிழகத்திற் கண்டறியப்பட்ட குகைச் சாசனங்கள் சமண, பௌத்த துறவியரால் வரையப்பட்டன என அறியப்படுகின்றன (டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை – தமிழர் சமய வரலாறு – 1980. ப. 38) சங்கப் பாடல்கள் சிலவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண - பௌத்த துறவியர் பற்றி அறிய முடிகின்றது. (சு. வித்தியானந்தன்-தமிழர் சால்பு - 1954 - ப. 149 - 52)

இவ்வாறு வெவ்வேறு சமயநிலைகள் அக்காலப் பகுதியில் பயில்நிலையிலும் அறிமுக நிலையிலும் காணப்பட்டன. எனினும் தமிழ்ப் பாரம்பரியத்தினின்று அனைத்திந்திய இந்து மத பாரம்பரியத்தை நோக்கியதான - வைதிக, பௌராணீக இந்துமத பாரம்பரியத்தை அணுகிச் செல்வதான - ஒரு சமய வரலாற்றுச் செல்நெறியே அன்று முதன்மைப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்களில்- குறிப்பாகப் புறநானூற்றில் - சுட்டப்படும் (வைதிக) வேள்விமுறை விவரங்களும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள இதிஹாசபுராண சமயச் செய்திகளும் இத்தகைய வரலாற்றோட்டத்தையே உணர்த்துவன. தமிழ் முருகன் வடமொழிப் புராண மரபின் கார்த்திகேயனுகப் புதிய பரிணமம் பெறத் தொடங்கிய ஒரு சூழல் இது. இத்தகு சூழல் தொடர்வதற்குத் தமிழகத்தின் அரசியல் வரலாறு இடம் தரவில்லை. தமிழ் வேந்தராகிய சேர, சோழ, பாண்டியரின் ஆதிக்கம் நிலைகுலையத் தொடங்கியது. தமிழகத்துக்கு அந்நியரான களப்பிரர் என்னும் மரபினர் சோழ, பாண்டிய நாட்டுப் பகுதிகளில் ஆதிக்கம் பெறத் தொடங்குகின்றனர். இவர்கள் பௌத்த - சமண மதங்களை ஆதரித்தோர். இதனல் சமய வரலாற்றுச் சூழல் பாதிப்படைந்தது.

களப்பிரர் முதலில் பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாகவே அறியப்படுகின்றனர். இவர்களுள் அச்சுதவிக்கிராந்தன் (அச்சுத விக்கந்தன் எனவும் வழங்குவர்) என்ற மன்னனைப்பற்றி அக்கால பௌத்த நூல்கள் அறியத்தருகின்றன. இவன் சோழ நாட்டுப் பகுதியில் ஆட்சி செலுத்தியவன். அக்கால பௌத்த நூல்களான விநயவிநிச்ச, அபிதம் மாவதார என்பன காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்தம் எய்தியிருந்த உயர்நிலையை உணர்த்துவன. சமகாலத்தில் தமிழ் நாட்டின் வடபகுதியில் பல்லவர் என்ற புது மரபினர் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தனர். இவர்களும் தொடக்கத்தில் பௌத்தமத ஆதரவாளர்களாகவே திகழ்ந்தனர். புத்தவர்மன், புத்யங்குரன் எனப் பெயர்பூண்ட பல்லவ மன்னர்கள் பௌத்த சார்பினராகவே அறியப்படுகின்றனர்.

மேற்படி காலப்பகுதியில் பல்லவர் தலைநகராகிய காஞ்சிபுரம் தமிழ் நாட்டுப் பௌத்தத்தின் மத்தியஸ்தானமாக விளங்கியது. அங்கு 100 பௌத்த மடங்களும் 10000 பௌத்த துறவியரும் வாழ்ந்தனர் என சீன யாத்ரிகர் யுவான் சுவாங் குறிப்பிடுவர். அன்று வட நாட்டில் புகழ்பூத்த பௌத்த பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த 'நாளந்தா'வின் தலைவராகத் திகழ்ந்தவரான தர்மபாலர் என்பவர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவராக அறியப்படுகிருர். இதன்மூலம் அன்று அனைத்திந்திய பௌத்தத்துக்கும் காஞ்சி வழிகாட்டக்கூடிய நிலையில் இருந்தமை புலனுகும். இந்தியாவுக்கு வெளியே ஜப்பான், சீன ஆகிய நடுகளுக்கும் பௌத்தம் பரப்புவதற்கு காஞ்சியிலிருந்து துறவியர் சென்றிருக்கின்றனர் எனவும் அறிகிருேம். இதன்மூலம் காஞ்சி கீழைத்தேய பௌத்தத்தின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தமை புலனுகும். பௌத்த திரிபிடக நூலின் சில பகுதிகளுக்குத் தமிழ் நாட்டில் இக் காலப் பகுதியில் உரைகள் எழுதப்பட்டன என்றும் தெரிகிறது. காஞ்சி தவிர போதிமங்கை, பழையாறை, நாகபட்டினம் ஆகிய இடங்களிலும் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

இவ்வாறு அறியப்படும் தகவல்கள் மூலம் கி. பி. 4ஆம், 5ஆம் நூற்றுண்டுகளில் தமிழ்நாட்டில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தமை உய்த்துணரப்படுகின்றது. சமகாலத்தில் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கிய மற்றெரு மதமான சமணம் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்று கி. பி. 7ஆம் நூற்றுண்டில் அரசியலாதிக்க உயர் நிலையை எய்தியது. திருநாவுக்கரசரால் சைவத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட மகேந்திரவர்ம பல்லவனும் (கி. பி. 600 —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

630) திருஞானசம்பந்தரால் சைவத்துக்கு மாற்றப்பட்ட கூன்பாண்டியனும் (அரிகேசரி மாறவர்மன் கி. பி 640 — 680) தம் வாழ் நாளின் முற்பகுதியில் சமணத்தைச் சார்ந் திருந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததே.

களப்பிரர் தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த காலப்பகுதியில் பாரம்பரிய இந்துமதம் பாதிக்கப்பட்டது. அக்கால தமிழக வர லாற்றை அறியத்தரும் சான்றுகளிலொன் ருன வேள்விக்குடிச் செப்பேடு இதனை உணர்த்தும். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னனுல் (இவன் சங்ககாலப் பாண்டியருள் ஒருவனு கக் கருதப்படுபவன்) வைகையாற்றங்கரை யிலே நற்கொற்றன் என்ற பிராமணனுக் குப் 'பிரமதேயமாக' வழங்கப்பட்ட பிர தேசம் பின்னர் களப்பிரர் அரசியலாதிக்கம் பெற்ற காலப்பகுதியில் அவர்களால் ரத்துச் செய்யப்படுகிறது. பல ஆண்டுகளின் பின் னர் பாண்டியர் தலையெடுத்துக் களப்பிர ரைத் தோற்கடித்தபின் மேற்படி நற் கொற்றன் பரம்பரையில் வந்த பிராமண னெருவனுக்கு அப்பிரதேசம் மீண்டும் 'பிரம தேயமாக' வழங்கப்படுகிறது. இதனை அச் செப்பேடு அறியத்தருகிறது.

இவ்வாறு பாரம்பரிய இந்துமதம் பௌத்த – சமண மதங்களால் பாதிக்கப் பட்டிருந்த ஒரு வரலாற்றுச் சூழலிலேயே திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல் களும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பேரிலக்கியங்களும் எழுந்தன. திருக்குறள் எம் மதமும் சாராத பொது அறத்தைக் கூற நாலடியார் முதலிய சில சமண நோக் கில் அறம் போதித்தன. சிலப்பதிகாரம் சமண பிரசார உணர்வை உட்கரந்து சுவை யான முத்தமிழ்ப் பேரிலக்கியமாக உருப் பெற்றது. ஆனுல் மணிமேகலை தன்னை ஒரு பௌத்த பிரசார நூல் என்று வெளிப் படையாகக் காட்டிக்கொண்டு பிரசுவ மாயிற்று.

உலகியலின்பங்களை மறுதலித்துத் துறவு பூண்ட ஒரு இளம் பெண்ணின் கதை இது. கணிகைக் குலத்தில் பிறந்த அவளுக்குக் கன்னிப் பருவத்தில் உலகியலின்ப நாட்டம் ஏற்பட்டது உண்மை. ஆயினும் அவளுக்கு வழங்கப்பட்ட போதனைகள். அவள் சந்தித்த அநுபவங்கள் என்பன அவளைத் துறவு நிலைக்கு இட்டுவந்துவிடுகின்றன. துறவி யாகவே அவள் வாழ்ந்து உலகுக்கு அமு தூட்டும் கருணைப் பணிபுரிந்து பிறவித்துயர் நீங்குமாறு நோன்பியற்றி நிற்கிருள்.

சமகாலத்தில் எழுந்த ஏனைய முற்கூட் டிய ஆக்கங்களைவிட மணிமேகலை தமிழரது சமய – தத்துவ வரலாற்றில் முக்கியத்துவ முடைய ஒரு சான்றுதாரமாகும். இந் நூலில் பௌத்தம் நேரடியாகப் பிரசாரம் செய்யப் படுவதோடு மட்டுமன்றி அக்காலப்பகுதியில் தமிழகம் அறிந்திருந்த பல்வேறு சமய தத்துவக் கருத்துக்களும் எடுத்துப் பேசப் படுகின்றன. இதன் விழாவறை காதை யிலே,

> ''ஒட்டிய சமயத் துறுபொருள்
> வாதிகள்
> பட்டிமண் டபத்துப் பாங்கறிந்
> தேறுமின்''

என்ற அழைப்பு அமைந்துளது. (அடிகள் 60-61). இது அன்றைய சமயவாதச் சூழலை உணர்த்திநிற்பது. இந் நூலின் இறுதிப் பகுதியில் அமைந்த சில காதைகள் — சமயக்கணக்கர் தம் திறங் கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமங் கேட்டகாதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை என்பவற்றில் சமய – தத்துவக் கருத்துக்கள் விரிவாகப் பேசப்படுகின்றன.

சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட நிகழ்ச்சியானது வஞ்சிமாநகரில் நடைபெறு கிறது. அங்கு மணிமேகலை பத்து வெவ் வேறு சமய தத்துவவாதிகளுடன் உரை யாடுகிருள். அப் பதின்மர் விபரம் வருமாறு:

> அளவைவாதி, வேதவாதி,
> வைசேடிகவாதி, சைவவாதி,
> ஆசீவகவாதி, பூதவாதி,
> பிரமவாதி, நிகண்டவாதி,
> வைணவவாதி, சாங்கியவாதி

இவர்கள் தத்தம் தத்துவ நிலைகளைச் சுருக்க மாகவும் விரிவாகவும் எடுத்துப் பேசுகின்றனர். இவற்றையெல்லாம் செவியுற்ற மணிமேகலை அவற்றை ஏற்றதாகத் தெரியவில்லை. மறுத்துரைக்கவும் இல்லை.

''நன்றலவாயினும் நான் மாறுரைக்கிலேன்'' (அடி 278) என்கிறாள். ஈற்றில் உரைத்த பூதவாதிக்குமட்டும் நகைப்புடன் சில மாற்றுக் குறிப்புக்களை முன்வைக்கிறாள்.

இக் காதையிலே மேற்படி பதின்மர து வாதங்கள் முன்வைக்கப்பட்டபோதும் காதையின் முடிவிலே மணிமேகலை ''ஐவகைச் சமயமும் அறிந்தனள்'' என்ற குறிப்பே உளது. மேற்படி பத்து ஐந்தானது எவ்வாறு என்பது ஆய்வு பூர்வமாகத் தெளிவு படுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

மேலே பிற்சுட்டிய இருகாதைகளும் பௌத்த தத்துவ விரிவுரைகளாக உள்ளன. இவற்றுள் வழங்கப்பட்டுள்ள தத்துவக் கலைச் சொற்கள் தமிழுக்கு அந்நியமானவை.

மேற்படி காதைகளில் இடம் பெற்றுள்ள விடயங்கள் தமிழர் தத்துவம் பற்றி ஆராய முற்படுவோர்க்குப் பெருவிருந்தாவன என்பதை விளக்கவேண்டியதில்லை. தமிழரின் சமய – தத்துவநிலை தொடர்பான கால முதன்மையுடைய சான்றாதாரங்கள் என இவை கருதத்தக்கன. பிற்காலத்தில் சைவசித்தாந்த சாஸ்திரங்களில் அமைந்த 'பரபக்கம்' (பிறமத மறுதலை) தொடர்பாகச் சிந்திக்கும்போது மணிமேகலையின் மேற்படி காதைகள் நம் கவனத்துக்கு வருவதைத் தவிர்க்கமுடியாது. சைவ சித்தாந்தம் பற்றிக் குறிப்பிடும்போது இன்னொரு முக்கிய அவதானிப்பையும் இங்கு சுட்டுவது அவசியம். சைவ தத்துவ நிலை தொடர்பாகத் தமிழில் கிடைக்கும் கால முதன்மையுடைய சான்று மேற்சுட்டிய சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதையின் சைவவாதி கூற்றேயாகும். அவர்,

''இருசுடரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையும் உயிரும் யாக்கையு
மாய்க்
கட்டிநிற்போனும் கலையுருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத்
தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோ னிறைவ னாகும்......''

(அடிகள் 89-95)

என இறையிலக்கணம் கூறுகிறார். இதிலே அமையும் இறைவனின் இயல்புபற்றிய விளக்கம்:

ஐம்பூதம், சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய எட்டினோடும் உயிரும் உடலுமாய்ப் பிணிப்புண்டவன்; கலை வடிவினன்; படைத்தல், அழித்தல், பிறவிப்பிணி அகற்றல் ஆகிய தொழில்கள் புரிபவன்; தன்னில் வேறு இல்லாதவன்.

இவ்வியல்புகளை நோக்கும்போது பிற்காலத்திலே சைவ சித்தாந்தம் கூறும் பதியிலக்கணத்துக்கான அடிப்படைக் கூறுகள் மணிமேகலைக்கால சைவத்திலே உருவாகத் தொடங்கிவிட்டமை புலனாகும்.

மணிமேகலையை இலக்கியம் என்ற வகையில் ஆராயும் முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. அதன் சமய – தத்துவக் கூறுகளும் சில ஆய்வாளர்களால் நோக்கப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. ஆயினும் மணிமேகலை காட்டும் பல்வேறு சமய – தத்துவக் கூறுகளும் அந்நூல் எழுவதற்குக் களமாக அமைந்த காலப்பகுதியின் அனைத்திந்திய சமயதத்துவச் சூழலும் தொடர்புபடுத்தப்பட்டு முழுநிலை நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அத்தகு ஆய்வுகளை மேற்கொள்வது தமிழரின் சமய – தத்துவ வரலாற்றுக்கு ஒளியூட்டுவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு - இடப்பெயர் ஆய்வு

கலாநிதி இ. பாலசுந்தரம்
சிரேஷ்ட விரிவுரையாளர் – தரம் 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மாந்தருக்கும் இடங்களுக்கும் பெயரிட்டு வழங்கும் மரபு மனிதன் சேர்ந்து வாழத்தொடங்கிய காலம் முதலாக ஏற்பட்டிருக்கவேண்டும். பெயரிடுவதற்கும் சில மரபுகளும் கொள்கைகளும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மாந்தருக்கும் இடங்களுக்கும் பெயரிடும் போது இயற்கைக் கூறுகளும் சுற்றாடலிற் காணப்பட்ட பொருட்களும் முதன்மை பெற்றிருக்கின்றன. பூதன் வேலன், மலையன், நாடன் என்ற பெயர்கள் இவ்வகையில் நோக்கத்தக்கன. இடங்களுக்குப் பெயரிடும் போது நீர்நிலைகள், நிலத்தன்மை, நிலப்பயன்பாடு, குடியிருப்புச் சூழல் ஊராட்சி பற்றிய சிந்தனை, தெய்வம், தாவரம், விலங்கு, பறவை முதலானவற்றின் பெயர்களே இடப்பெயர்களாக ஆக்கம் பெற்றுள்ளன.

இடங்களுக்குப் பெயரிட்ட பின்பு, அப்பெயர்களுக்கு விளக்கம் கூறும் வகையில் கதைகளும் தோன்றலாயின. மிகப் பலவிடங்களில் 'மெய்யும் ஒப்பும்' புறந்தள்ளப்பட்டு 'பொய்யும் வழுவும்' தலைதூக்கலாயின. இவற்றைக் களைந்து உண்மை காணும் முயற்சியினைக் குறிக்கும் ஆய்வுத் துறையே 'இடப்பெயராய்வு' ஆகும். இடப்பெயராய்வு மூலம் குறிப்பிட்ட இடப்பெயர் விளக்கம் பெறப்படுவதோடு, அவ்விடத்தோடு தொடர்புடைய வரலாற்றுச் செய்திகள், பண்பாட்டுச் செய்திகள், இயற்கைவளம் முதலான விடயங்களையும் அறியக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இப் பின்னணியில் இக்கட்டுரையில் நயினாதீவு பற்றிய இடப்பெயர் ஆய்வு அமைகின்றது.

வட இலங்கைத் தீவுகளில் நயினாதீவு வரலாற்றுப் பழைமை மிக்கதொரு இடமாகும். மேற்குநாட்டினர் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்திய போது-குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் தீவுப் பகுதிகளை ஒல்லாந்தர் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இத் தீவுகள் ஒவ்வொன்றிற்கும் ஒல்லாந்தின் கண்ணுள்ள தீவுப் பெயர்களை இட்டும் வழங்கினர். அவ்வகையில் நயினாதீவைக் ஹார்லம் (Harlem) என்று வழங்கினர். கந்தபுராணத்தில் சப்த தீவுகள் என்ற குறிப்பு வருகின்றது. இவை இந்து சமுத்திரத்தில் காணப்பட்டன என்றும், அவற்றுள் 'சம்பு' என்பது நயினாதீவாகும் என்றும் 'கந்தபுராண மறைபொருள்' என்ற நூலிலே டானியல் ஜோன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து குறிக்கட்டுவன் வரையும் வாகனத்திற் சென்று, அங்கிருந்து இயந்திரப் படகுமூலம் நயினாதீவைச் சென்றடையவேண்டும். இத்தீவிற்கு மறுபெயர்களாக நாகதீவு, நாகத்தீவு, நாக நயினாதீவு, நாகதீபம், நாவல்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவம், மணிபல்லவத் தீவு, மணி நாகதீவு, பிராமணர்தீவு, மணித்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம் எனத் தமிழிலும், நாகதிவயின எனச் சிங்களத்திலும், ஹார்லெம் என டச்சு மொழியிலும் வழங்கப்படுகின்றது. இப்பெயர்கள் ஏற்பட்டமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன:-

1. நாகர்களின் ஆதிக் குடியிருப்பாலும், நாகவழிபாட்டாலும், நாகங்கள் அதிகமாக வாழ்ந்தமையாலும் நாகதீவு எனப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.

2. நயினாதீவு (நயினார் தீவு) என்ற பெயர் வழங்கக் காரணமாகப் பின்வரும் செய்தி அமைகின்றது; மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மாநாய்கன் என்னுமொரு வைசியர் இருந்தாரெனவும், அவரே நயினாதீவு வடகிழ்த்திசையில் நாகபூஷணிக்கு ஒரு சிறந்த ஆலயம் கட்டுவித்தாரெனவும், மதுரைவைசியர்களிடமிருந்து பெற்ற ஏடுகள் கூறுகின்றன. மாநாய்கன் என்னும் வைசியரே நயினார் பட்டர் என்ற அந்தணரையும், கண்ணப்பன் என்ற வேளாளரையும் நயினா தீவுக்குக் கொண்டுவந்தார். அக்காலத்தில் நாகதீவு என்றே வழங்கப்பட்டது. நயினார்பட்டர் அறிவிற் சிறந்தவராகவும், அரசினர் தொடர்புடையவராகவும் வாழ்ந்தபடியால், தமது ஞாபகத்தைப் பிற்காலத்தவரும் நினைக்கவிரும்பி நாகநயினார்தீவு என மாற்றினர். காலப்போக்கில் நயினா பட்டரின் செல்வாக்கும், அவர் சந்ததியாரின் செல்வாக்கும் விருத்தியடைய 'நாக' என்ற சொல்விடப்பட்டு நயினார்தீவு என அழைக்கப்படலாயிற்று. நயினார் பட்டரின் 20-ம் தலைமுறையினரான இளையதம்பி உடையார் காலத்திற் பட்டர் மரபினர் நாகபூஷணிக்குப் பூசை செய்வதை விடுத்து அரசாங்க சேவையிற் சேர்ந்தனர்; பிற்காலத்திற் பட்டர் மரபினர் செல்வாக்கொழிய நயினார்தீவு என்ற சொல்லில் 'ர்' விகுதி விடப்பட்டு நயினாதீவு ஆகிற்று. (1

3. இத்தீவிற்குப் பூந்தோட்டம் என்ற புராதனப் பெயரும் வழங்கிற்று. தமிழகத்துச் சிதம்பரம் கோயிலுக்குத் தேவையான பூக்களைப் பெறுவதற்கு நயினாதீவுத் தில்லை வெளியில் ஒரு பெரிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டுப் பூக்கள் சிதம்பரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன, தில்லைக் கோயிலுக்குரிய பூப்பெறப்பட்ட இப்பூந்தோட்டம் 'தில்லைப்பூந்தோட்டம்' என வழங்கப்படுவதாயிற்று; காலப்போக்கில் இப் பூந்தோட்டம் அழிய, அங்கு அந்தத் தில்லைவெளி 200 பரப்பளவுடையதாக இன்றும் காணப்படுகிறது.



4. இலக்கியம் சுட்டும் 'மணிபல்லவம்' என்ற பெயரும் நயினாதீவினையே குறிக்குமென்பர். 'ஒரு சிறுதீவு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலைவில் உள்ளது; அங்கே தன்னைத் தரிசிப்பவர்களுக்குப் பழம்பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்தபீடிகை ஒன்றும், கோமுகி எனும் பொய்கையும் இருந்தன. மணிமேகலை தன் பழம் பிறப்பை இப்புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவதிலகையின் உதவியால் இக்கோமுகியிலே பெற்றாள்' எனக்கூறப்பட்டுள்ளது. (2)எனவே இப்பெயர் வழங்கியது கி. பி. 2-ம் நூற்றுண்டளவில் ஆகலாம்.

5. முற்காலத்தில் நயினாதீவில் இறைவன் சந்நிதியும் இறைவிசந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன. அப்பனும் அம்மையும் கோயில் கொண்டருளி இருந்த ஆலயமே நாகேஸ்வரமென அழைக்கப்பட்டது; அந்த ஆலயப் பெயரே ஊர்ப்பெயராக வழங்கி வந்திருக்கிறது. (3)

நயினாதீவும் நிகழ்வுகளும்:

1. புத்தர்பெருமான் கி. மு. 523 – 483 இற்கிடையில் நாகதீவில் நாக வழிபாடாற்றியிருக்கிறார்.

2. பர்மாவிலிருந்து தர்மசோகமகாராசா புத்திரசோகத்தால் வருந்தி நாக வழிபாடியற்றி புத்திரப்பேறடைய நாகதீவு வந்தார்,

3. அருச்சுனன் மணிபுரத்திற்கு வந்து நாககன்னியை மணந்து பப்பிரவாகனைப் பெற்றான். இன்றைய நாகபூசணி அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் பப்பிரவாகன் சல்லி என்பதும் நோக்கற்பாலது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆபுத்திரன் அட்சயபாத்திரத்தை கோமுகிப பொய்கையில் இட்டுச் சென்றான்.

5. நெடுமுடிக்கிள்ளி எனும் சோழ மன்னன் மணிபல்லவத்திற்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து தொண்டைமான் இளந்திரையனைப் பெற்றான் என யாழ்ப்பாணத்துச் சரித்திரம் கூறுகிறது. (4)

6. இங்கு கிரேக்க, உரோம, இந்திய, சீனப் பழைய நாணயங்கள் காலத்திற்குக் காலம் கிடைத்துள்ளன.

7. கி. பி. 12-ம் நூற்றாண்டுக்குரிய சீன நாட்டுச் சாடிகள் கிணறு ஒன்றில் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாகரும் நயினாதீவும்:

நாகர் வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 14,000 வருடங்களுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்றம் இருந்திருக்கவேண்டும். அவர்களாற் தாபிக்கப்பட்ட நாகபூஷணி அம்மன்கோயில் மூலஸ்தானத்திலுள்ள நாகம் 14,000 வருடங்களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக்கலை சிற்பக்கலை, பொறியியல் நிபுணரான திரு. எம். நரசிம்மன் 11-03-51) கருதுகின்றார். (5)

கோயில்கள்:

நயினாதீவில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமே மிகப்பெரியது; புகழ் வாய்ந்தது. இதனைவிட ஐயனார், ஸ்ரீ வீரபத்திரர், வயிரவர், முருகன், வேம்விநாயகன், காளி, காட்டுக்கந்தசுவாமி, விநாயகர், பிடாரி, மீனாட்சி அம்மன், மலையில் ஐயனார் ஆகியோருக்கும் ஆலயங்கள் அமைந்துள்ளன, அத்துடன் பௌத்த-கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆலயங்களும் இடம் பெற்றுள்ளன.

நயினாதீவு பண்டைக்காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கியது. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்ற தன்மையினாற், தமிழ்நாட்டுக் கப்பல்களும், அந்நியநாட்டுக் கப்பல்களும் இத்தீவுத்துறைமுகத்திற் தங்கியே சென்றிருத்தல் கூடும். இத்தீவின் மேற்குக் கரையிற் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதிக்கடல் ஆழமாகவும், பெரிய கப்பல்கள், படகுகள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

காவியங்களில் நாகதீவு:

"நசையாத நாகதீவில் நாகத்தின்
மணிவாங்க
கசிவான மனதுடனே கடுகவுமை
யழைத்தோங்காண்"

என வழக்குரைத்த காதை கூறுகிறது. இத்தீவிலேயே மணிமேகலை தனது பழம் பிறப்புக்கதையையும் அறிந்தாள். மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திற்குக் கொண்டுவந்த செய்தியை,

"பூங்கொடி தன்னைப் பொருந்தித்
தழீஇ
அந்தரம் ஆறா ஆறு அயந்துயோசனைத்
தென்திசை மருங்கில் சென்று-திரை
உடுத்த
மணிபல்லவத்திடை மணிமேகலா
தெய்வம்
அணி-இழை-தன்னைவைத்து
அகன்றது".

(மேகலை-6: 210-214)

என மேகலை கூறுகின்றது. மணிமேகலை இத்தீவில் அம்பிகையின் அருட்பீடத்தைக் கண்டு தொழுது, முற்பிறப்பு உணர்ந்தாள். இதனை,

"பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்
தெனப் பொருந்தி
உன்திருவருளால் என்பிறப்பு
உணர்ந்தேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மேகலை 10: 17-18) என்ற அடிகள் உணர்த்துகின்றன. ''உலக அறிவியின் ஒரு தனிஏறி'' (மேகலை: 17 : 86) என்னும் வரியில் சுட்டும் 'உலக அறிவி' இன்றும், 'உலகநிரை' என்ற காணிப் பெயராக வழங்குகின்றது. 'அமுதசுரபி' என்ற பெயரில் 1961இல் அன்னதானசபை யொன்று செயற்பட்டுவருகின்றது. ஆபுத்திரன் இந்திரனின் சதியால் இத்தீவிற்கு வந்து அமுதசுரபியைக் கோமுகி என்ற பொய்கையிற் போட்டபின்னர் இறந்தான் என்ற நாட்டார் வழக்கியலான கதை ஒன்றும் இங்கு வழங்குகின்றது. (6)

தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னனது பிறப்புடன் தொடர்புடையதாகவும், இத்தீவு வழங்குகின்றது. (7) இங்கு காணப்படும் 'பரதவர்கல்' என்ற இடம் கண்ணகி வழக்குரையில் வரும் வீரநாராயணனும், மீகாமனும் போரிட்ட இடம் எனக் கூறப்படுகின்றது. இத்தீவின் கடலிலே 'கருடன் கல்' என்ற கல் பற்றியும் நாட்டார் வழக்கியல் சார்ந்த கதை வழங்கப்படுகின்றது. (8) நயினாதீவில் உள்ள படகுதுறை, உவான்துறை, துடரித்துறை, வாகையடித்துறை என்பன பண்டைய வணிகத்துறைகளாக வழங்கியிருக்கலாம். இவ்விடங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் நிகழ்த்தப்படுதல் அவசியமாகிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் (கி. பி. 1620-1624) இங்கிருந்த பழம்பெரும் சிறப்பு வாய்ந்த கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. இக் கோயிற்கல்லை ஏற்றிக் கொண்டுபோய் ஊர்காவற்றுறையில் சங்குமாவடி என்ற இடத்தில் கோட்டை கட்டப் பயன்படுத்தியுள்ளனர். நயினாதீவு போர்த்துக்கேயர் ஆட்சிப் பிரிவுகளாகிய 32 கோயிற்பற்றுக்களில் ஒரு பிரிவாக ஆக்கப்பட்டது. 1635இல் இங்கு வாழ்ந்த குடியிருப்பாளர் தோம்புகளில் பதியப்பட்டனர். ஆங்கிலேயர் காலத்திற் தீவுப்பகுதி மணியகாரனின் நிர்வாகத்தின்கீழ் நயினாதீவும் ஒரு கிராமமாக அமைந்தது.

## அடிக்குறிப்புகள்

1. சரவணபவன், ஐ. - '' நயினாதீவு வரலாற்றுப் பின்னணி '', கோமுகி, நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம், 1972: ப. 19.
2. கலைக்களஞ்சியம் - தொகுதி: 8, ப. 78.
3. சரவணபவன், ஐ. 1972: பக். 21
4. C. C. Navaratnam; Tamils and Ceylon, Jaffna, 1958, pp. 74-75.
5. சரவணபவன், ஐ. மேற்படி நூல், ப. 25
6. சண்முகநாதபிள்ளை, நா. க: - புராதன நயினை நாகபூசணி ஆலயவரலாறும் அருட் பாமாலையும், யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் வெளியீடு, 1981.
7. வேலன்: மணிபல்லவத்துமதலை: யாழ்ப்பாணம், திருநாவுக்கரசு பதிப்பகம்.
8. கண்ணகி வழக்குரை —வெடியரசன் போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

R.
S.
M.
T.

T'Phone: 422465

# R. S. M. TRADERS

NO. 220, PRINCE STREET,
COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலை

*— சில அறிமுகக் குறிப்புகள் —*

**கலாநிதி சி. மௌனகுரு**
நுண்கலைத்துறை
யாழ் - பல்கலைக்கழகம்

நாடகம் (Theatre) இன்று உலக நாடுகளில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற ஒரு கலையாகும். அதே நேரத்தில் இது ஆராய்ச்சிக்குரிய ஒரு துறையுமாகும். நாடகத்தைக் கற்பதன் வாயிலாக மனிதர்களையும், அவர்களின் உணர்வுகளையும் அறிந்து கொள்கிறோம். நாடக வரலாற்றைக் கற்பதன் வாயிலாக மனித நாகரிக வளர்ச்சியை அறிந்து கொள்கிறோம். நாடக வரலாற்றில் உயர் மரபை மாத்திரம் படிப்பதில்லை. உயர் மரபோடு உப மரபையும் சேர்த்தே படிக்க வேண்டும். ஏனைய இலக்கிய ஆசிரியர்களைவிட நாடக ஆசிரியன்தான் மக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறான். நாடகம் மதத்தின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது. மதத்தின் வரலாறு அறியாமல் நாடகத்தின் வரலாற்றை அறிய முடியாது. மனிதனையும், அவன் வளர்ச்சியையும் அறிய உதவும் இந்நாடகம் இன்று மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் ஒரு பாட நெறியாக உள்ளது. இத்துறை பற்றி ஆழமான ஆய்வுகள் அங்கு செய்யப்படுகின்றன. நிறைய நூல்களும் வெளிவருகின்றன. இலங்கையிலே கூட பல்கலைக்கழகப்புகுமுக வகுப்புக்கு இது ஒரு பாடமாக உள்ளது. பட்டப் படிப்பிற்கும் இது பாடமாகப் பயிற்றப்படுகிறது. சங்கீதம், நடனம் ஆகிய கலைகளைப் பயில ஒரு வரன் முறை இருப்பது போல நாடகத்தைப் பயிலவும் ஒரு வரன் முறை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இச் சூழலில் நாடகம் பற்றிய ஞானமும், அதன் வரலாறு, வளர்ச்சி பற்றிய தெளிவும் நாடகத்திலீடுபடுவோர்க்கு இக் கால கட்டத்தில் அவசியமாகின்றது. இது இல்லார் அரங்கின்றி நாடகமாடுபவர்களாகவே காட்சியளிப்பர்.

நாம் சின்னஞ்சிறிய ஒரு தீவில் ஆசியாவின் ஒரு மூலையில் வாழ்ந்தாலும் கூட உலகத்தோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளோம். உலகின் மாறுதல்கள் எம்மையும் பாதிக்கின்றன. நாடகமும் இதற்கு விதிவிலக்கன்று. உலக நாடக மரபைப் பிரதான மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஐரோப்பிய நாடகமரபு மற்றது ஆப்பிரிக்க நாடக மரபு, இன்னொன்று ஆசிய நாடக மரபு. ஆசியாவின் நாடக மரபு பழமையும் செழுமையும் வாய்ந்தது. அது ஐரோப்பிய நாடக மரபினின்றும் மாறுபட்டது. ஆசியாவின் ஒரு பகுதியில் வாழ்கின்ற எமக்கும் - குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்க்கு ஒரு நாடக மரபுண்டு. இம்மரபை உலக நாடக வளர்ச்சிப் பின்னணியில் விளங்கிக் கொள்ளவும், அதன் மூலம் நம் குறை நிறைகளைத் தெரிந்து கொள்ளவும் நாடகம் பற்றிய அறிவு நமது நாடக ஆர்வலர்க்கு அவசியம்.

முதலில் நாடகத்தின் சாராம்சம் என்ன என்பதனை நோக்குவோம். கலைகளைப் பொதுவாக இரண்டு பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று உருவாக்கிக் காட்டும் கலைகள் (Making Arts) இன்னொன்று நிகழ்த்திக் காட்டும் கலைகள் (Performing Arts) சிற்பம், ஓவியம் என்பன உருவாக்கிக் காட்டும் கலைகளாகும். இங்கு கலைஞனுக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லை. ஆனால் நாடகம் நிகழ்த்திக் காட்டும் கலையாகும். இதிற் பங்கு கொள்ளும் கலைஞர்கள் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கிறார்கள். உதாரணமாக பிக்காஸோவின் அல்லது ரவிவர்மாவின் படத்தை நாம் அவர்கள் இல்லாமலேயே இரசிக்கலாம். ஆனால் நடிகன் இல்லாமல் நாடகத்தை இரசிக்க முடியாது. இங்குதான்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தின் சாரத்தைக் காணுகின்றோம். அதாவது நிகழ்த்தப்படுவதும் நேரடியாக மக்களுடன் தொடர்பு கொள்வதுமே நாடகத்தின் சாரமாகும். நாடகத்தின் தன்மையையும் போக்கையும் இவ்வடிப்படை அம்சமே நிர்ணயிக்கிறது.

மீளச் செய்தலும், தொடர்பு கொள்ளலும் நாடகத்தின் சாரம் எனலாம். எப்போதோ நடந்த ஒன்றை மீளவும் மேடையிற் செய்து காட்டுகிறோம். செய்து காட்டுதல் மூலமாக மனிதக் கூட்டத்துடன் தொடர்பு கொள்ளுகிறோம்.

நடிகனும், பார்வையாளரும் தாம் செய்வதையும், பார்ப்பதையும் பொய்ம்மை என அறிந்தும் அதனை மெய்யென ஏற்று அதில் ஈடுபடுகிறார்கள். நாடகம் ஒருவகையில் நடிகனுக்கும் பார்வையாளனுக்குமிடையில் நடைபெறும் பொய்ம்மை விளையாட்டே. சில சட்டதிட்டங்கள் உள்ள விளையாட்டு. அவ்வளவுதான். பொய்ம்மை விளையாட்டு குழந்தைகளுக்குரியது – ஒரு சிறிய நெருப்புப்பெட்டி காராக மாறுவதும், தும்புத்தடி குதிரையாவதும் குழந்தை உலகில் சகஜம். அவற்றை அவ்விதமாகக் குழந்தை நம்புகிறது. குழந்தை மனோபாவம் மனிதரிடம் – என்றும் – எவ்வயதிலும் உள்ளதால் நாடகமும் என்றும் வாழும்

நாடகம் ஒரு எதிர்வினைக் கலையாகும். (Re active Art) பார்வையாளரிடம் அது என்ன பாதிப்பினை ஏற்படுத்துகிறது என்பதிலேயே அதன் சாரம் தங்கியுள்ளது.

இந் நாடகத்தை நிகழ்த்த அரங்கு அவசியம். பார்வையாளரையும். நடிகரையும் இணைக்கும் இடத்தையே அரங்கு என்கிறோம். காட்சி கட்புலனாகத் தோன்றும் இடம் அரங்கு என விளக்கம் தருவர். இவ்வரங்கு காலத்துக்குக்காலம் மாறி வந்துள்ளது. திறந்தவெளி அரங்கிலின்று, உயர்த்தப் பட்ட திறந்த வெளி மேடையைக் கடந்து, முப்பக்கம் அடைக்கப்பட்ட கொட்டகைக் கூடாக இன்றைய நவீன நாடக அரங்குவரை அரங்கு பல வளர்ச்சிகளைக் காலப் போக்கில் பெற்று வளர்ந்திருக்கிறது. இன்றைய அரங்கு பார்வையாளரையும், நடிகரையும் பிரிக்கிறது எனக் கண்டு முன்திரையை அகற்றிவிட்டு பழையபடி திறந்த வெளி அரங்கிற்கே செல்லுகின்ற போக்கினை மேலை நாட்டு நாடகங்களில் இன்று காணுகின்றோம். இங்கெல்லாம் பார்வையாளர், நடிகர் சங்கமிப்பே நாடகத்தின் சாரமாக இருப்பதனைக் காணுகின்றோம். பார்வையாளருடன் நேரடித் தொடர்பு கொள்ளலும் பொய்ம்மை உணர்வை மெய்ம்மை என எண்ணப் பண்ணுதலும் நாடகத்தின் பிரதான சாரங்களென்பது புலனாகின்றது.

அடுத்து ஏனைய கலைகளின்று நாடகம் எவ்வகையில் மாறுபடுகிறது என்பதனைப் பார்ப்போம்.

ஏனைய கலைகளான ஓவியம், சிற்பம், காவியம் என்பன முழுமையடைந்த பின்னரேயே ரசிகர்களை அடைகிறது. ஆனால் நாடகமே- சிருஷ்டி நடைபெறுகையிலேயே மக்களைச் சென்றடைகிறது. இதனாலேயே அரங்கு தினமும் பிறந்து இறக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. ஏனைய கலைகளைக் கூட்டாக இருந்துபார்க்கத் தேவையில்லை. நாடகத்தைக் கூட்டாக இருந்துதான் ரசிக்க முடியும் கூட்டுணர்வுடன் நாமும் ஒன்று-கையிற்பெறுகின்ற பேரானந்தமே நாடகத்தின் பயன். நடந்து கொண்டிருக்கும் நாடகம் மாத்திரமல்ல நம்மோடு உடனிருந்து பார்க்கும் பார்வையாளர்களின் கைதட்டலும், சிரிப்பும் ஏன் விசிலடியும் கூட நம்மைப் பாதிக்கிறது. இக்கூட்டு இரசிப்பு ஏனைய கலைகளுக்கில்லாத ஒன்று,

ஏனைய கலைகள் தனித்தனிச் சிறப்புக்களைக் கொண்டதாக அமைய நாடகம் அனைத்துக் கலைகளும் சங்கமிக்கும் இடமாக அமைந்துள்ளது. ஓவியம், சிற்பம், கட்டிட நிர்மாணம்: இசை, நடனம் ஆகிய நுண் கலைகள் அனைத்தினதும் இணைப்பிலேயே நாடகம் மேடையேறுகிறது. இக்கலைகள் அளவாக இணையுமிடத்து ஏனைய கலைகளை விடத் தாக்கமான அனுபவத்தை நாடகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை தருகிறது. எனவேதான் சுவைபட வந் தனவற்றையெல்லாம் ஓரிடத்துத் தொகுத் துக் கூறுதலே நாடகம் என உரையாசிரியர் இளம் பூரணர் கூறுகிறார்.

இதுவரை நாடகத்தின் சாராம்சத்தினை யும், அது ஏனைய கலைகளினின்று வேறுபடுவ தனையும் கண்டோம். இக்கலையை எவ்வாறு பயில்வது? என்பது நம் முன்னுள்ள வினு வாகும்.

இத்துறையிற் பாண்டித்தியம் பெற பயிற்சியும் அறிவும் தேவை. நடிகனே நாட கத்தின் உயிர்நாடி. இதனை நடிகனின் கலை (Actor's Art) என்பர். நடிகனுக்குத் தேவை யானவை நினைத்தபடி வசையும் உடலும், வளமான குரலும் கற்பனை மிகுந்த மனமும் ஆகும். இம் மூன்றுக்கும் அதாவது உடலுக் கும், குரலுக்கும் உளத்திற்கும் பயிற்சி கொடுப்பதனையே நாடகப் பயிற்சிப் பட் டறைகள் பெரும்பாலும் செய்கின்றன தேகப்பயிற்சிகளும், கருத்தூன்றப் பயிற்சி களும், குரற்பயிற்சிகளும் இன்னவாறு செய் யப்பட வேண்டும் எனச் சில விதிமுறைக ளுள்ளன. ஸ்ரனிஸ் லாவ்ஸ்கி என்ற நாடக மேதை இம்முறையினை விஞ்ஞான பூர்வமாக அமைத்து வைத்துள்ளார். அத்தோடு கூட் டாக நாடகம் செய்கின்ற கூட்டுணர்வை யும், மற்றவர்மீது நம்பிக்கையையும் நாட கப் பட்டறைப் பயிற்சிகளில் பங்கு பற்று வோர் பெறுகிறார்கள்.

செய்முறை மூலமாக ஒளியமைப்பு, ஒப்பனை, மேடை, அதன்பயன்பாடு, மேடை அசைவுகள், மேடைப் பொருட்கள், மேடை யின் உயர்வு தாழ்வு ஒழுங்குமுறை ஒலிய மைப்பு, நடனம், இசை என்பனவற்றில் போதியளவு அறிவையும் பயிற்சிப்பட்டறை கள் தருகின்றன.

இவற்றைவிட நாடகக்காரர்கள் நாடக அரங்கின் வரலாற்றை அறிந்திருக்க வேண் டும். ஆசியா நாடக அரங்கு, ஐரோப்பிய நாடக அரங்கு, ஆபிரிக்க நாடக அரங்கு அவற்றின் தன்மைகள் என்பனவற்றை அறி தல் வேண்டும். நடிப்புக்கலைக்கு ஒரு வரலா றுண்டு. நடிப்பிற் பல பாணிகளுமுண்டு. மனோரதிய நடிப்பு இயற்பண்பு நடிப்பு அடத்த நடிப்பு, மோடியுற்ற நடிப்பு, கிராமிய நாடக நடிப்பு என நடிப்பு முறைகள் பலவகைப்படும். இவற்றின் தன்மைகள், வேறுபாடுகள் என்பன பற்றிய அறிவு நடிகனுக்கு அவசியம். அத்தோடு சிறந்த நாடகாசிரியர்களின் நாடகங்களை யும், நாடகத்திலீடுபடுவோர் அறிதல் வேண்டும். அவற்றை வாசித்து அதிற் பாண்டித்தியம் பெறுதல் வேண்டும். நாட கம் பற்றிய தத்துவங்களை அறிதல் வேண்டும்.

நவீன நாடகத்துறையில் பெரும் பங் காற்றிய ஸ்ரனிஸ்லாவஸ்கி நடிகனை நாட கத்திற் பிரதானப்படுத்தினார். மேயர் ஹோல்ட் நெறியாளரை நாடகத்திற் பிர தானப்படுத்தினார். மேயர் ஹோல்டின் கொள்கைப்படி நடிகன் நெறியாளர் இயக்கிவைக்கும் ஒரு பாவைதான். கோடன் இறைக் காட்சிகளை நாடகத்திற் பிரதா னப் படுத்தினார். பேட்டல் பிரச்ட் உணர்ச் சிக்கு இடம் கொடாது பார்வையாள ரைப் பாராதீனப்படுத்தி நாடகத்தில் அறிவுறுத்தலைப் பிரதானப்படுத்தினார். பீட்டர் புறூக் பார்வையாளர்களையும் நடிகரையும் ஒன்றிணைக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டார். மேற் சொன்ன நாடக விற்பன்னர்கள் அனைவரும் நவீன நாடகத் தைப் புதிய பரிமாணங்களுக்கு இட்டுச் சென்ற முக்கியஸ்தர்கள். இவர்களின் வாழ்க்கை வரலாறு சிந்தனையும், நாடகத் தத்துவமும் பற்றிய அறிவு நவீன நாடகத் தயாரிப்பாளர்கட்கு அவசியம்.

இத்தோடு நமது கூத்து மரபு பற் றிய அறிவும் நாடகக் காரர்கட்கு அவ சியம். எம்மிடம் ஆடல்பாடல் நிறைந்த தும், செழுமை பொருந்தியதுமாக உள்ள தனித்துவமான நாடகமரபே கூத்தாகும். இவ்வறிவு எம்மை புதிய பரிமாணங்கட்கு இட்டுச் செல்லும். இவற்றை அறிவதால் மாத்திரம் ஒருவன் நாடகக் கலைஞனுகி விட முடியாது; அவனிடம் அதற்குரிய திறன், உணர்வு என்பன உள்ளார்ந்த முறையில் அமைந்திருப்பதும் அவசியமாகும். அந்த உள்திறனை வளர்க்க இவை நன்கு உதவும்.

இவ்வண்ணம் நாடகத்தின் சாரம் அதன் சிறப்பம்சங்கள், அதனைப் பயில்வ தற்கான வழிகள், நாடகம் பற்றிய தத் துவம், நமது கூத்துமுறை, என்பனவற் றைப்பற்றிய அறிவு நமது நாடகக் கலைஞர் கட்கு அவசியம். இவ்வறிவின் பின்னணி யில் நாடகக் கலையில் ஈடுபடுகையில் அத னின்று முகிழ்க்கும் நாடகங்கள் ஆழமாக வும் அழகாகவும் கனதியாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவ கலாமன்ற முதுநிலை உறுப்பினர் ஒருவரின் சில ஆலோசனைகள்



வி. என். பரராஜசிங்கம்
சின்மய மிஷன் இலங்கை, கொழும்பு.

பிரபஞ்சப் பேரண்டத்தில் பூமி ஒரு சிறு கோளம். அப் பூமியில் இந்து சமுத்திரத்தில் இலங்கையோ ஒரு சிறு தீவு. அத் தீவின் வடமேற்கு முனையில் ஒரு 'மினி'த் தீவு. அங்கே உலகின் பெரிய நான்கு மதங்களின் வழிபாட்டிடங்கள், ''உலகம் யாவையும் தாமுளவாக்கி (தன்னுளவாக்கி)'' நிற்கின்ற பான்மையை உணர்த்துகிறது. சூழ் கடல் சூழலைப் பாதுகாக்கின்றது. குடாநாட்டிலிருந்து செல்லும் ஒரு பயணியை ''தாலாட்டும்'' கடல் பயணத்தின் பின் நீண்ட பெரிய பாலத்தின் அடிப்புறம், இறையை அன்னையாக வழிபடும், வேப்ப மரங்கள் சூழ் அலங்கார ஆலயம் வாழ்க்கையின் நோக்கை ஊடகமாக எடுத்துக் காட்டும் ஒரு அமைவாக—அடையவேண்டியதை உணர்த்தி ஜீவயாத்திரையின் மூலஸ்தானத்தை நோக்கி—ஆம்! தன்னையே நோக்கி நிற்பதை கூர்ந்து கவனித்தால் புரிகின்றது. இங்குள்ள மக்களின் விருந்தோம்பல், அந்நியோன்யத்துவம், மனிதப்பண்பு, உறவு முறைமை, கலாரசனை, கவித்துவம் ஏனையவர்களோடு ஒப்பிடும்போது சிறப்பாகப் பளிச்சிடுகின்றது. மனித சமுதாயத்திலுள்ள 'கழி'த்தல் (—) (கழிக்கப்படவேண்டிய) குணங்கள் கூட இங்குள்ளவர்களிடம் விகிதாசாரப்படி மிகக் குறைவானதாகும்.

ஒத்து வாழ்வு, ''எல்லாம் அவள் செயல்'' என்ற பூரண சரணாகதித் தத்துவ அசையாத நம்பிக்கையினால் ஊரடங்குகளும் வன்முறைகளும் இருண்ட நாட்களும் அங்கு செயலற்று நின்றமை அண்மைக்கால நிதர்சனங்களாகும். இப் புனித பூமித் திடலிலுள்ள மக்களின் மனச் செழுமையைப் பண்பாடியல்களூடாக வளர்ந்தோம்ப முனைந்த முயற்சியின் விளைவான மணிபல்லவ கலாமன்றம் தனது 28ஆவது ஆண்டு விழாவையொட்டி 'மணிபல்லவம்' என்ற இதழை வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்வடைகிறேன். வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேக்கி - அசைபோடும்பொழுது - கால் நூற்றுண்டுக்கு மேலாகி விட்டதே! நம்பமுடியவில்லை. ஆனல் உண்மை, நாற்புறமும் கடல் சூழ் நிலை; நயினையின் தனித்துவத்தைப் பேணி வளர்த்தமைக்குக் காரணி, போல் உற்சாகமுள்ள இளைஞர் சக்திக்கு 'நம்ம ஊர்' மனப்பான்மை யுடையவர்களின் 'வழங்குந்தன்மை' செயல்பட வைத்தாலும், நிரந்தர செயற்பாட்டை நோக்கி ஆக்கபூர்வமான திட்டங்களைக் கொண்டிருந்தால் தான் மன்றம்; வெள்ளி, பொன், வைர விழாக்களைத் தாண்டும் நிலைக்கு அடிகோல வைக்கலாம் என்பதை இங்கு நினைவுறுத்தல் கடமையெனக் கருதுகிறேன். குறுகிய கால வேண்டுகோள் நீண்ட ஆய்வுக் கட்டுரையின் மலர்வைத் தடுத்தாலும் தற்போதைக்கு மூன்று குறிப்புகளைக் குறிப்பிட வேண்டியது அவசிய—அவசரமாகின்றது.

i, தாந்திரீக முறைப்படி இங்குள்ளது 'புவனேஸ்வரி பீடம்' எனவும் 64 சக்தி பீடங்களில் ஒன்று என அழைக்கப்பட்டு வருகின்றது. இது சர்ச்சைக்குரிய விடயமாகத் தென்படுகின்றது. 'மணித்தீவு' என்று பெயர் கொண்ட தீவு இதுவானல் இது ''வித்யா'' பீடமாகும். மணித் தீவில் வித்யா பீடத்தில் சரஸ்வதி விஞ்ஞானம் பொழிவதாக ''சௌந்தர்ய லகரி''யில் ஆதி சங்கராச்சாரியார் குறிப்பிடுகிருர். ''வித்யா பீடத்''திற்கான சான்றுகள் நடைமுறையில் இங்கு காணக் கூடியதாக விருக்கின்றது. இங்குள்ளவர்களின் கலைத்தன்மை-நாவன்மை —பிறரால் வியக்குமளவுக்குள்ளதே 'வித்யா பீடம்' என்பதை நிரூபிக்கின் றது. இதைக் குறிப்பிட்டு, ஆழமாக ஆராய்பவர்களின் சிந்தனையைக் கிளறி விடப்படவேண்டியது ஒரு வரலாற்றுத் தேவையெனக் கருதுகி றேன்.

ii. இங்குள்ள அம்பாளின் சக்திப் பெருக்கு காலத்துக்குக் காலம் பல அன்பர்கள் மூலமாக உணர்த்தப்பட்டிருக்கிறதென்பதை பகிரங்கமாக வும் ரகசியமாகவும் ஏற்றுக்கொள்பவர்கள் பலர் உண்டு. பிரபல சக்தி பீடங்களிலுள்ள ஒவ்வொரு சக்தியையும் ஒவ்வொரு சிறப்புருவம் கொண்டு வழிபாடு செய்யப்படுகின்றது. உதாரணமாக; காமாட்சி, மீனுட்சி. காளி. கருமாரி, துர்க்கை, இலட்சுமி. சரஸ்வதி, அகிலாண்டேஸ் வரி, காயத்திரி, மூகாம்பிகை, லலிதா, ராஜராஜேஸ்வரி, அபிராமி, சிவகாமி முதலிய வடிவங்களின் பெயரைக் கேட்ட மாத்திரத்தே அந் தந்த உருவம் மனதில் படுகின்றது பதிகின்றது. ஆனல் நாகபூஷணி அம்பாளுக்கென்று ஒரு விசேட வடிவம் இது வரை இல்லை. மறைந்த தொண்டர் ஆர். ஆர். பூபாலசிங்கத்தினல் வெளியிடப்பட்ட படம் திருவானைக்காவிலுள்ள அகிலாண்டேஸ்வரியின் வடிவமைப்பாகும். உருவ வழிபாட்டின் மூலம் பரம்பொருளைத் தாயாக வழிபடும் சக்தி உபாஸகர்களுக்கு. நயினை நாகபூஷணியின் உருவத்தை மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானிப்பதில் குழப்பங்கள் அடைய இடமுண்டு. மனதில் தியானப் பொருளாக்குவதற்குரிய வடிவம் ஒன்று ஆராயப்பட்டு அமைப்பது முக்கியத் தேவையெனப்படுகிறது.


அண்ட சராசரங்களைப் படைத்த அச் சக்திக்கு சிறு மனிதர்களால் வடிவம் படைப்பது கேலிக்குரிய விடயம் என்பது வேதாந்தத் தொனிப் பாக இருப்பினும் உருவ வழிபாட்டைப் பின்பற்றும் மக்களே பெரும்பான் மையாக இருப்பதால் இப்பணி மிக முக்கியமானதாகும். இதற்கானசமய – வரலாற்று – சிற்ப வல்லுநர்களை அடக்கிய மாநாடு ஒன்றைக் கூட்டி ஆராய்ந்து ஒரு வடிவத்தைத் தெரிவு செய்ய வேண்டிய பணிக்கு கலைவிழா முடிந்ததும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்படி மணிபல்லவ கலாமன்றத்தினரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

iii. மணிபல்லவ கலாமன்றம் ஆண்டு தோறும் இயல், இசை, நாடகத்துறைச்கு கலைஞர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் பரீட்சார்த்த மாக பரதம், வாத்தியக் கலைகள் என்பனவற்றில் 'மகாபொல' ப் பாணி யில் செயல் படுத்தல்.

28ஆவது ஆண்டுக்கலை விழாவும் மணிபல்லவ வெளியீடும் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by



Tharaka Transport Service

Urumpirai North,

URUMPIRAI.

**P. MAHALINGAM**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

NIMASHA SWEET HOUSE

33/9, Kurunduwatta Lane,
Nawala Road.
**RAJAGIRIYA.**

SRITHARAN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமும் நாக வணக்கமும்

## (பிராமிக் கல்வெட்டுக்கள் தரும் தகவல்கள்)

சி. .க சிற்றம்பலம்,
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,

ஈழத்து-வரலாற்று நூல்களாகிய மகாவம்சம், தீபவம்சம் போன்ற நூல்கள் புத்தர் கி.மு. 6ஆம் நூற்றுண்டில் இங்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இருந்த சில சிற்றரசுகள் பற்றிய தகவலைத் தருகின்றன. இவற்றுள் வட பகுதியிலுள்ள நாக அரசும், மேற்கே உள்ள கல்யாணி அரசும் மலையகப்பகுதியில் உள்ள மகியங்கனைச் சிற்றரசும் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் வடபகுதி நாக அரசின் இரு மன்னர்களான மகோதர, சூளோதர ஆகியோர் பற்றிய குறிப்போடு, இவர்களின் மாமனுகிய மணியக்கிய என்பவனே கல்யாணி அரசின் மன்னனுக விளங்கிய செய்தியும் இவற்றுள் உண்டு. புத்தர் சுமணகூட என அழைக்கப்படும் சிவனெளி பாதமலைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது சுமணன் என்ற மன்னன் புத்தரின் நினைவாக அவரின் கேசத்தில் ஒரு பகுதியைப் பெற்று மகியங்கனை ஸ்தூபியில் வைத்து வணங்கியது பற்றியும் கூறப்படுகிறது. இதனுல் இப் பகுதியும் சிற்றரசாக இருந்திருக்கலாம். இம் மன்னன் நாக வழிபாட்டினன் எனக் கூறப்படாவிட்டாலும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் இப் பகுதியில் நிலவிய நாக மன்னர் ஆட்சி பற்றியும் குறிப்பதால் ஒருசமயம் இப்பகுதியில் உள்ளோரும் நாக வழிபாட்டினராக விளங்கியிருக்கலாம். எவ்வாறுயினும் இவ்விலக்கியங்கள் குறிக்கும் 'நாகர்' என்ற சொல்லு ஒரு வம்சத்தின் பெயரல்ல. அது இவ் வழிபாட்டில் திளைத்த மக்கட் கூட்டத்தினரையே குறிக்கும் சொல்லாகும். இருந்தும் இந்நூல்கள் இவர்களை அமானுஷ்யர்கள் என்று கூறுகின்றன.

எனினும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் பட்டியலில் 'நாக' என்று காணப்படும் பெயர்களை உற்று நோக்கும்போது இது உண்மையிலே ஒரு வம்சப் பெயராக மட்டுமன்றி நாக வழிபாட்டின் சின்னமாகவே விளங்கியது புரிகிறது. மகாவம்சம் ஈழத்து வரலாற்றுக் காலத்தின் முதல் மன்னனுக தேவநம்பியதீஸனைக் (கி.மு. 247–210) குறிக்கின்றது. இம் மன்னனுக்குப் பத்துச் சகோதரர்கள் இருந்ததாகவும் குறிப்பிடுத் தேவநம்பியதீஸன் பின் அரச கட்டிலேறவேண்டியவனுக 'உபராஜநாக' என்பவனையும் பற்றிக் குறிக்கிறது. இம் மன்னனின் இயற்பெயர்தெரியவில்லை. வெறுமனே 'நாக' என்றுதான் இவன் அழைக்கப்பட்டான் போல் தெரிகிறது. 'உபராஜ' என்பது இவனது பட்டமாகும். அடுத்து அரசு கட்டிலேறுபவர்கள் சூடியிருந்த பட்டம் இஃதாகும். தமையனுக்குப்பின் தம்பியே அரச கட்டிலேறும் மரபு ஆதியிற் காணப்பட்டதால், அரச பதவி தனது மகனுக்கன்றி இவ்வுபராஜநாகவுக்கே சென்று விடும் என எண்ணிய தேவநம்பியதீஸனின் மனைவி அவனைக் கொல்வதற்கு மேற்கொண்ட சூழ்ச்சியிலிருந்து தப்புவதற்காக இவன் தென் கிழக்கிலங்கைக்குச் (பிற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோகண இராச்சியத்திற்கு) சென்று தனது அரசிருக்கையை அங்கே மாகமவில் அமைத்தது பற்றியும் மகாவம்சம் கூறுகிறது. இப்பகுதி இம் மன்னன் இங்கு செல்ல முன்னரே வேறு இரு சிற்றரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இச் சிற்றரசர்களைக் கதிர்காமச் சத்திரியர்கள், சண்டேகமச் சத்திரியர்கள் என மகாவம்சம் அழைத்து இவர்கள் அரசமரக் கிளையை அநுராதபுரத்தில் நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டனர் எனவும் குறிப்பதோடு இவர்களுடன் பிராமணன் திவகவும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகிறது. பின்னர் இவ்வரச மரக்கிளை இவர்களின் கிராமங்களில் நாட்டப்பட்டதும் கூறப்படுவதால் இவர்கள் ஆரம்பத்தில் இந்துக்களாக விளங்கியதும் பின்னர் பௌத்தர்களாக மாறியதும் தெரிகிறது. இவர்கள் பின்னர் பௌத்தர்களாக மாறியது மட்டுமன்றி அம் மதத்திற்குப் பலவகையான தானங்களையும் அளித்த செய்தியும் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. மகாநாக ஆரம்பத்தில் இச் சத்திரியர்களுடன் நல்லுறவு கொண்டிருந்திருக்கலாம். கதிர்காமச் சத்திரியர்கள் இருப்பிடம் கதிர்காம முருகன் ஆலயப்பகுதியே. இது மகாகமவிலிருந்து 12 மைல் தொலைவிற்றான் உள்ளது. சண்டேகம சத்திரியர்களின் இருப்பிடம் பற்றிய தகவல்கள் நமக்குக் கிட்டாவிட்டாலும் அவர்களும் இவர்களைப் போன்று ரோகணைப் பகுதியில் வாழ்ந்தார்கள் என்றே பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள். மகாநாக ஆட்சியின் பின்னர் அவனது மகனாகிய கோத்தபாயா காலத்தில் இரு பகுதியினருக்குமிடையே கசப்புணர்வு தோன்ற இச் சத்திரியர்களைத் கோத்தபாயா கொன்று அப் பழியிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு 500 விகாரைகளை ரோகணை இராச்சியத்தில் கட்டியதாகவும் தாதுவம்சம் கூறுகிறது. இச் சான்றுகளைத் துருவி ஆராயும்போது சத்திரியர்கள் தோல்வி கண்டாலும் தொடர்ந்தும் இப் பகுதியில் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் உள. பின்னர் கோத்தபாயாவின் மகனான காகவன்னதீஸன் காலத்தில் சத்திரிய வம்சத்தோடு ஏற்படுத்தப்பட்ட மணத் தொடர்புக்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள. இக் காகவன்னதிஸவின் மகன் தான் துட்டகைமுனு (கி . . 161-137) ஆகும். சிங்கள பௌத்த மதத்தின் காவலனா துட்டகைமுனு ஒரு பக்கத்தில் நாக வழிபாட்டிற்குரிய பெயரைத் தாங்கிய 'மகாநாக' வின் வழித் தோன்றலாக மட்டுமன்றி, மறுபக்கத்தில் கதிர்காமத்தில் ஆட்சி செய்த இந்துக்களாகவிருந்து பின்னர் பௌத்தர்களாக மாறிய சத்திரியர்கள் வழித்தோன்றலுமே எனலாம் இச் சத்திரியர்கள் இங்குள்ள கல்வெட்டுக்களில் பத்துச் சகோதரர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

தேவநம்பியதீஸன் தம்பி 'உபராஜ' நாக சூடிய 'நாக' என்ற பெயர் இவன் பின்னர் வந்த அரசர்கள் பலராலும் சூடப்பட்டது தெரிகின்றது. இவ்வரசர்கள் அட்டவணையை மகாவம்சமே தருகின்றது. நீண்ட காலப் போக்கில் நாக வணக்கத்துக்குரிய பெயர்கள் மறக்கப்பட்டாலும் கூட, தொடர்ந்தும் பல மன்னர்கள் இப் பெயர்களைச் சூடியிருந்தமை ஆராயற்பாலது. இவர்கள் பெயரும் காலமும் பின்வருமாறு அமைகின்றது. துல்லத்த நாக (கி,மு. 119) கல்லத்த நாக (கி.மு. 109-103) சோற நாக (கி.மு 63-51) மகாதாதிக மகாநாக (கி.பி. 7-19) ஈழநாக (கி.பி. 33-43) மகல்லக நாக (கி.பி. 136-43) குஜ்ஜநாக (கி.பி. 186-187) குஞ்சநாக (கி.பி. 187-9) முதலாவது சிறிநாக (கி.பி. 189-209) அபயநாக (கி.பி. 231-40) இரண்டாவது சிறிநாக (240-42) மகாநாக (கி.பி. 569-71) என்பனவாகும். இவ்வட்டவணையைப் பார்க்கும் போது கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை அதாவது பௌத்த மதம் பரவிய கால கட்டத்தில், அதுவும் அதற்கு வேண்டிய ஆதரவு அரச மட்டத்தில் கிடைத்த கால கட்டத்தில், காணப்படும் நாக என்ற இப் பெயர்கள், ஈழத்தில் இந் நாக வழிபாடு நன்கு வேரூன்றியிருந்தமையையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் ராசநாயகம் (Rasanayagam C.1926) இந்நாக மன்னர்களின் அட்டவணை பற்றி இற்றைக்கு அரை நூற்றாண்டுகட்கு மேலாக எடுத்துக் காட்டினாலும் கூட இவர்கள் நாகவம்சத்தினர் எனத் தவறான கருத்தையும் வெளியிட்டிருந்தார் என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

மேற்கூறிய கருத்தை உரம் செய்வதாக ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் அமைகின்றன. இக் கல்வெட்டுக்கள் பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட தானத்தை எடுத்தியம்புவனவாகக் காணப்பட்டாலும் இத் தானத்தை வழங்கியோர் பற்றித் தரும் தகவல்களை உற்று நோக்கும் போது அவர்களது பழைய வழிபாட்டைக் குறிக்கும் பெயர்களான சிவ, குமார, விஷ்ணு, விசாக, கந்த போன்ற பல பெயர்கள். இவற்றுள் காணப்படுகின்றன. இத்தகைய பெயர்களின் பின்னணியில் இக் கல்வெட்டுக்களில் கிட்டத்தட்ட 90 இடங்களில் காணப்படும் பெயர்களை உற்று நோக்கும் போது சிவ, விஷ்ணு வழிபாடுகளுக்கு முன்னர் ஈழத்தில் நிலைத்திருந்த நாக வழிபாடு பற்றிய தகவல்களைக் காணமுடிகின்றது எனலாம். இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் சூடியிருந்த பெயர் மூலம் அவரின் வழிபாட்டு மரபை அறிந்து கொள்ளும் மரபு இன்றும் உள்ளது நினைவு கூரற்பாலது. இக் கல்வெட்டுக்களிற் பெரும்பாலானவை கிறிஸ்தாப்தத்திற்கு முந்தியவையே. இவை காணப்படும் இடங்கள் கருங்கற்களால் ஆன குகைகள் உள்ள இடங்களே. இத்தகைய கற்பாறைகள் யாழ்ப்பாண மாவட்டத்திலோ, அன்றி மன்னார் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலோ இல்லை. இதனாற்றான் இங்குள்ள நாகவழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் பற்றிய குறிப்புக்களை நாம் இக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடியவில்லை. எனினும் வடபகுதியில் வவுனியா மாவட்டத்திலுள்ள சில சான்றுகள் வடபகுதியிலும் இவ் வழிபாடு நாட்டின் பிற பகுதிகள் போன்று திளைத்திருந்தது என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. எல்லாமாக அநுராதபுர மாவட்டத்தில் 28கல்வெட்டுக்களிலும், வவுனியா மாவட்டத்தில் 4 கல்வெட்டுக்களிலும், பொலநறுவை மாவட்டத்தில் 3 கல்வெட்டுக்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 கல்வெட்டுக்களிலும், அம்பாறை மாவட்டத்தில் 5 கல்வெட்டுக்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 6 கல்வெட்டுக்களிலும், மொனராகலை மாவட்டத்தில் 4 கல்வெட்டுக்களிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் 1 கல்வெட்டிலும், கண்டி மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களிலும், மாத்தளை மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களிலும், குருநாகல் மாவட்டத்தில் 14 கல்வெட்டுக்களிலும், புத்தளம் மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களிலும் நாகவழிபாடு பற்றிய தகவல்கள் உள. இவற்றைப் பரணவித்தானா 1970இல் பதிப்பித்துள்ளார். (Paranavitana. S.1970) இதனால் இக் கட்டுரையில் வரும் இக் கல்வெட்டுக்களின் இலக்கங்கள் இந்நூலிலுள்ள இவற்றின் இலக்கங்களையே குறிக்கின்றன என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

பொதுவாகவே இக் கல்வெட்டுக்கள் ஆதிக் குடியேற்றம் பரந்து காணப்பட்ட வரண்ட வலயப் பிரதேசத்திற்றான் செறிந்து காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாக என்ற பெயர் சாதாரணமாகக் காணப்படுவதோடு பல அடைமொழிகளுடனும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் ராஜ, பருமக, கமிகா, கஜபதி, பட/பரத, உபசிகா, உபாசக, தேர போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். ராஜ என்றது குறுநில மன்னரையே குறிக்கும். பருமக, கமிகா, கஜபதி நாட்டின் உள்ளூர் நிருவாகத் தலைவர்கள் ஆகும். உபாசக என்பது பௌத்த மத ஆண் விசுவாசியாகும். உபசிகா என்பது பௌத்த மத பெண் விசுவாசி ஆகும். தேர என்பது பௌத்த மத குருவாகும். இச் சான்றுகள் பௌத்த மதத்திற்கு மதம் மாற முன்னரும் மாறிய பின்னரும் இத் தானங்களை அளித்தோர் பின்பற்றிய நாக வழிபாடு பற்றிய தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தருகின்றன எனலாம். இச் சந்தர்ப்பத்தில் இக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'நாககுலம்' பற்றிய குறிப்புப் பற்றிக் கூறுவதும் அவசியமாகின்றது. இரண்டு இடங்களிலே இக் குறிப்புண்டு. முதலாவது கல்வெட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள பம்பரகஸ்தலாவ (507) என்ற இடத்திலுளது. இக் கல்வெட்டு அரசனுடைய அரண்மனையில் சமையற் கூடத்தின் மேற்பார்வையாளனும் பருமக என்ற பட்டத்தைச் சூடியவனுமாகிய நாக குலத்தைச் சேர்ந்த ஒருவர் பற்றிக் கூறுகிறது. மற்றைய கல்வெட்டு குருநாகல் மாவட்டத்திலுள்ள இப்பவுவ (958) என்ற இடத்திலுள்ளது. இங்கேயும் பருமக என்ற பட்டத்தைத் தாங்கிய நாக குலத்தைச் சேர்ந்தவருமான அதிகாரி பற்றிக் கூறப்படுகிறது. இவ்வதிகாரி 'உதி' என்ற பெயரைத் தாங்கிய 'ஆய்' மன்னர் கீழ் கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது. இங்கே குறிக்கப்படும் 'குலம்' என்ற பதத்திற்கு பரணவித்தானா 'குடும்பம்' என்ற கருத்தையே தந்திருக்கிறார். இதனால் 'இக் குலம்' என்ற பதம் நாக வம்சத்தைக் குறிப்பதற்குப் பதிலாக நாக வழிபாட்டைத் தமது குலவழிபாடாகப் பேணிவந்த குடும்பத்தைக் குறித்தது எனக் கொள்ளுவதே பொருத்தமானது.

தேவநம்பியதீஸனின் காலத்தை அண்டிய பகுதிக்குரிய கல்வெட்டுக்கள் வவுனியா மாவட்டத்தில் உள. இவற்றின் வரிவடிவம் கி.மு. 3ஆம், 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவே. வவுனியா நகரிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள பெரிய புளியங்குளத்தில் உள்ள குகை கல்வெட்டுக்களில் நான்கு முக்கியமானவையாகும். (338, 339, 340, 341). இவற்றில் இப் பகுதியில் அரசோச்சிய குறுநில மன்னனாகிய ராஜா உதி, அவனின் மனைவி அபி அனுரதி, அவளின் தகப்பன் ராஜா நாக ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். இங்கே கூறப்படும் 'உதி' தேவநம்பியதீஸனின் தம்பியரில் ஒருவனென பரணவித்தானா கூறியதோடு இக் கல்வெட்டில் வரும் 'நாக' என்ற பெயர் தேவநம்பியதீஸனின் மற்றொரு தம்பியாகிய மகாவம்சம் குறிக்கும் 'உபராஜநாகவையே' குறிக்கிறது எனவும் கருத்து வெளியிட்டுள்ளார். அப்படியானால் உதி, தனது சகோதரன் மகளாகிய அனுராதாவை மணந்தான் என்றே கொள்ளவேண்டியுள்ளது. இத்தகைய திருமணங்கள் நடந்தேறியதற்குச் சான்று இருப்பதால் அநுராதபுரத்தில் மன்னனாக முன்னர் இங்கே இக்கல்வெட்டை வெளியிட்டிருக்கலாமென்று பரணவித்தானா கருதுகிறார். ஆனால் இக் கல்வெட்டுக்கள் வவுனியாப் பகுதியில் அரசோச்சிய இரு குறுநில அரச குடும்பங்களையே குறிக்கின்றன என குணவர்த்தனா கூறுகிறார். அவர் கூறும் நியாயங்கள் ஏற்புடையதாகவும் உள்ளன. தேவநம்பியதீஸனின் தம்பி வெளியிட்ட மிகுந்தலைக் கல்வெட்டுக்களில் அவன் கமனிமகாராஜ, தேவநம்பிய என்ற பட்டங்களுடன் விளிக்கப்படுவதாலும், இவ் வுதியின் பெரிய புளியங்குளக் கல்வெட்டில் நாக என்ற மன்னனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாலும் தேவநம்பியதீஸனின் சகோதரர்களாகிய மகாநாகவோ அன்றி உதியோ இக் கல்வெட்டுக்களுக்குரியவரல்லர் என அவர் கூறுவது நியாயமாகத் தோன்றுகிறது.

மகாவம்சமும் அதனது உரை நூலாகிய வம்சத்தமகாசினியும் ரோகணை முழுவதும் தேவநம்பியதீஸனின் தம்பியாகிய மகாநாகவின் ஆணை தடை அற வியாபித்திருந்தது எனக் கூறுகின்றன. இதனை ஆதாரமாக வைத்துக் கொண்டே கிடைக்கும் கல்வெட்டுக்களை ஆராய்ந்து பரணவித்தானா மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலகந்த (389) கல்வெட்டில் குறிப்பிடப்படும் உபராஜநாக, ராஜ அபய, ராஜ கமனிதிஸ எனவரும் பெயர்கள் துட்டகாமினியின் முன்னோர்களான மகாநாக, கோத்தபயா, காகவன்னதிஸா ஆகியோரையே குறிக்கின்றது என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். ஆனால் இவ்வாறு பரணவித்தானா கொள்ளுவது தவறு என்று குணவர்த்தனா எடுத்துக் காட்டி இதற்கு ஆதாரமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மொட்டயக் கல்லு' என்ற இடத்திலுள்ள கல்வெட்டையும் கூறியுள்ளார். இக் கல்வெட்டில் உபராஜ நாக, ராஜ அபய, ராஜா கமனிதிஸ ஆகியோர் குறிப்பிடப்பட்டாலும் கூட மேலும் பல தகவல்களை இது தருகின்றது எனவும் கூறியுள்ளார். இவர் மேலும் இக் கல்வெட்டில் வரும் வசனத்தை பரணவித்தான 'தசபதிகரண ஜவகன்ய உபராஜ நாக' என வாசித்தது தவறு என்றும் உண்மையிலே இதனைத் தசபதிகரண சக கனய உபராஜ என வாசிப்பதே சரி எனவும் கூறியுள்ளார். அப்படியாயின் பரணவித்தான வாசித்த வசனத்தின் பொருளாகிய பத்துச் சகோதரருள் யாவக தலைவனான உபராஜ நாக என்பதற்குப் பதிலாக பத்துச் சகோதரருள் இளையவனான உபராஜ நாக என்பதே இதற்குச் சரியான பொருளாகும். இங்கே குறிக்கப்படும் பட்டமாகிய 'உபராஜ என்பதும் இவ் வம்சத்தோரில் இளைஞனாகிய நாகவுக்குப் பொருத்தமானதெனக் குணவர்த்தன கூறுவதும் ஏற்புடைத்தாகவுள்ளது. இதனால் தேவநம்பியதீஸன் சகோதரனான 'உபராஜநாக' அன்றி இதே நாமம் உடைய கதிர்காமச் சத்திரிய வம்சத்தின் கடைசிச் சகோதரனான உபராஜ நாக மட்டக்களப்பு, அம்பாறைப்பகுதியில் அரசோச்சியது புரிகிறது. இப் பத்துச் சகோதரர்கள் மாணிக்க கங்கை ஆற்றங்கரையில் கதிர்காமத்தைத் தமது அரசிருக்கையாக வைத்துக் காணப்பட்டாலும் இவர்கள் வம்சத்தோர் ஆட்சி மட்டக்களப்பு மாவட்டத்திலும் வியாபித்திருந்ததும், இவ் வம்சத்தின் கடைசிச் சகோதரன் நாகவழிபாட்டிலுள்ள தனது ஈடுபாட்டை எடுத்துக் காட்டு முகமாக இப் பெயரைச் சூடியிருந்ததும் இதனால் தெரிகிறது. கதிர்காமச் சத்திரியர்களின் பிற கல்வெட்டுக்கள் போவத்தகல, கொட்டடமுகேல ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. இவை பௌத்த மதத்திற்கு மாறிய பின் இவர்கள் அதற்கு அளித்த தானங்களைப் பறைசாற்றுவனவாகவே அமைந்துள்ளன. தேவநம்பியதீஸனின் தம்பி மகாநாக, மகாகமத்தில் (தற்கால திஸ மகாராமத்தில்) அரசிருக்கை அமைத்ததும், நாக வழிபாடு இவ்விடத்தோடு தொடர்புடையதாகப் பிற்காலத்திலும் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

பழைய மலையரட்டை (மலைநாடு) எனப்பட்ட மலைப்பிரதேசத்திலும் நாக மன்னர் ஆட்சிக்குரிய சான்றுகள் உள. கண்டி மாவட்டத்திலுள்ள பம்பரகல (814), கோனவத்த (813) ஆகிய இடங்களிலுள்ள இரு கல்வெட்டுக்கள் இங்கே நிலவிய நாக என்ற பெயரைத் தாங்கிய குறுநிலமன்னர் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. முதலாவது கல்வெட்டு கண்டியிலிருந்து 18 மைல் தொலைவிலுள்ள பம்பரகல என்ற இடத்திலுள்ளது. இதில் 'பொசனிராஜநாக' என்ற குறுநில மன்னன் குறிக்கப்படுகின்றான். இதே கல்வெட்டில் இவனது மனைவி 'தத்த' அவளின் தகப்பனாகிய பிராமணன் 'கொஜார' ஆகியோரும் விளிக்கப்பட்டுள்ளனர். பம்பரகலவிலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள கோனவத்தவில் உள்ள பிராமிக் கல்வெட்டு பௌத்த சங்கத்திற்கு கமனிதிஸ என்பவனால் அளிக்கப்பட்ட தானம் பற்றிக் குறிக்கிறது. இக் கல்வெட்டின் வரிவடிவம் இதனை அளித்த கமனிதிஸ கி. மு. 2 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி. மு. முதலாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என எடுத்துக் காட்டுகின்றது. இதிலுள்ள முக்கியம் யாதெனில் இக் கமினிதிஸா தனக்கு முன் அரசாண்ட நான்கு சந்ததிக் குறுநில மன்னர்களைக் குறிப்பதே. இக் குறுநில மன்னரில் முதல்வனாக பொகுனிராஜா, ராஜா அபய. ராஜா நாக, ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். இங்கே விளிக்கப்படும் ராஜநாக, பம்பரகலக் கல்வெட்டில் குறிக்கப்படும் பொசனி ராஜ நாகவைக் குறிக்கின்றதா அல்லது இரு இடங்களிலுமுள்ள இக்கல்வெட்டுக்கள் இப் பகுதியில் செங்கோலோச்சிய இரு தனி நாக சிற்றரசுகளைக் குறிக்கின்றனவா என்பது ஆராயற்பாலது. எவ்வாறாயினும் 'நாக' என்ற பெயருடன் காணப்படும் அரசனின் பெயர் இப்

பகுதியில் நாக வழிபாட்டைப் பேணிய சிற்றரசர் வாழ்ந்ததையே எடுத்துக் காட்டு கின்றது எனலாம்.

மேற்கூறிய சான்றுகளை விட 'நாக' என்ற பெயருடைய குறுநில மன்னரது ஆட்சிக்காலம் பற்றியும் மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் குறிக்கத் தவறவில்லை. இவை முறையே அநுராதபுர, குருநாகல், மொனராகலை மாவட்டங்களிற் காணப்படு கின்றன. அநுராதபுர மாவட்டத்திலுள்ள வெஸ்ஸகிரிக் கல்வெட்டில் (1120) நாகராஜ ஆட்சிக் காலத்தில் பௌத்த குருமார்களுக் காகக் கட்டப்பட்ட வதிவிடம் பற்றிய குறிப் புண்டு. இவ்வாறே குருநாகல், மாவட்டத் திலுள்ள கடுறுவேவ (1207) கல்வெட்டில் 'நாகராஜ'வின் ஆட்சிக் காலத்தில் அளிக் கப்பட்ட குகைத்தானம் பற்றிய குறிப் புண்டு. மொனராகலை மாவட்டத்திலுள்ள கொல்ல தேனியாக் கல்வெட்டில் (736) பருமகன் புஸ்ஸதேவனின் மனைவியாகிய பருமகள் சோணுவினுல் குறுநில வம்ச ஆயைச் சேர்ந்த நாக (மன்னனின்) ஆட்சி யில் அமைக்கப்பட்ட குகைபற்றிக் குறிப் புண்டு. இக் கல்வெட்டில் குறுநில மன்ன ரான 'ஆய்' வம்சத்தவர் குறிக்கப்படுகிறது நோக்கற்பாலது. அத்துடன் மகாவம்சத்தில் புத்சரது விஜயத்தின்போது சுமண மகியங் கனையில் அமைந்த புத்தரது கேசம் அடங் கிய ஸ்தூபி பற்றிய குறிப்பை நோக்கும் போது இப்பகுதியிலும் நாகச் சிற்றரசுகள் இருந்திருக்கலாமென்ற நமது யூகத்தினை இக் கல்வெட்டு மேலும் உறுதி செய்கின் றது எனலாம்.

பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவாக குகைத் தானங்களையே எடுத்தியம்புவதால் இக் கல்வெட்டுக்களில் வரும் 'நாக' என்ற பெயரைத் தாங்கியோர் ஒன்றில் குகைக் குச் சொந்தக்காரராகவோ அல்லது குகைத்தானத்தை அளித்தவர்களாகவோ காணப்படுகின்றனர் சில இடங்களில் வெறுமனே நாக என்ற பெயர் மட்டும் காணப்படுகிறது. 'நாகருடைய குகை' எனப் பொருள் தரும் கல்வெட்டுக்களுக்கான உதாரணங்களை அநுராதபுர மாவட்டத்தி லுள்ள அண்டியாகல (110) கண்டகல (1339) குருநாகல் மாவட்டத்திலுள்ள குடம்புறு லேன (896) ஆகியவற்றுட் காணலாம். மாத்தளை மாவட்டத்திலுள்ள டம்புல (859) பிராமிக் கல்வெட்டில் நாகத்தால் வழங்கப்பட்டவன் எனப் பொருள் தரும் 'நாகதத்த' என்ற பதம் காணப்படுகிறது. இப்பெயரைத் தாங்கியோர் இதன் சொந்தக் காரராக விளங்கினர். இவ்வாறே நாக என்ற பெயருடன் பருமக போன்ற பட்டப் பெயர்கள் காணப்படுவதோடு, சில சமயம் நாக என்ற பெயரைத் தாங்கியோர் சந்ததி யும் கூறப்படுகிறது. இவ்வாறு இரண்டு சந்ததிகள் கூறப்படும் கல்வெட்டுக்களில் தொடர்ந்து தகப்பனுக்குப் பிறகு மகனே அன்றி மகனுக்குப் பிறகு தகப்பனே இந்த நாக என்ற பெயரைத் தாங்கியதற்குச் சான்றில்லை. இதனுல் நாக வணக்கம் பௌத்தத்தின் தாக்கத்தினுல் நாளடைவில் செல்வாக்கிழந்த நிலையையே இக் கல்வெட் டுக்கள் எடுத்தியம்புகின்றன எனலாம். சில சமயம் 'நாக' என்ற பெயரைத் தாங்கி யோரின் இயற்பெயர் கூட இக் கல்வெட்டு களில் உள. உதாரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளக் கல்வெட்டில் (343) 'பருமகன் உதிபவின்–மகன் சூடி நாக' எனக் குறிக்கப்படுகின் றன். இவ்வாறே அநுராதபுர மாவட்டத் திலுள்ள மகா அலகமுவக் கல்வெட்டிலும் பருவ நாகவினுடைய குகை என்ற தொடர் காணப்படுகிறது

ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம், நாக என்ற பெயருடையோர் தாங்கிய பட்டங் களை முதலில் ஆராய்வோம். இதில் பிர தானமானது 'பருமகன்' என்ற பட்டமே. இது நிருவாகத்தின் மன்னருக்கு அடுத்த பதவி வகிப்போரைக் குறித்து நின்றது. துரதிஷ்டவசமாக வேள், ஆய் போன்ற மன்னர்களது அந்தஸ்துடையோர் 'நாக' என்ற பெயரைத் தாங்கியதற்கான சான்று கள் கிடைக்கவில்லை. பருமகன் என்ற பட்டத் தினை உடைய கல்வெட்டுக்கள் எல்லாமாக ஆறு அநுராதபுர மாவட்டத்திலுள. இவற் றுள் மிகுந்தலை (21, 54) கந்தாகல விகாரை (120), மஞகந்த (196), றிற்றிகலவிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறக்கல (261, 263, 265) ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் மனகந்தவிலுள்ள (196) கல்வெட்டு ஒன்று தான் 'பருமகன் நாகவின் குகை' என்று சுருக்கமாகக் கூறப் பிறகல்வெட்டுக்கள் ஒன்றைத் தவிர யாவும் பருமகன் நாகவின் மகனின் (பெயரைச் சுட்டி) குகை என்ற பொருளிலே காணப்படுகின்றன. மேற் கூறிய தனிக் கல்வெட்டில் (261) பருமகன் நாகவின் சந்ததி கூறுவதற்குப் பதிலாக, பருமகன் நாக என்பவன் பருமகன் மகாரேதஸ என்பவனது மகன் என்று மட்டும் கூறப்படுகின்றது. பொலநறுவை மாவட்டத்தில் இரு கல்வெட்டுக்கள் (312, 318) உள. இவ்விரு கல்வெட்டுக்களும் குகைச் சொந்தக்காரர்களான பருமகன் நாகவின் தந்தையரது பெயரைக் குறிக்கின்றன. இவற்றுள் முத்துக்கலக் (312) கல்வெட்டு 'பருமகன் நாக திஸை லேன' எனக் கூறுகிறது. அதாவது பருமகன் நாகதிஸைவினுடைய குகை என்பதே இதன் பொருளாகும். நாகதிஸை என்றால் நாகத்தால் வழங்கப்பட்டவன் என்பது பொருளாகும். மற்றக் கல்வெட்டில் 'நாக' என்ற பதம் மட்டுமே காணப்படுகின்றது. பருமகன் என்ற பட்டத்தினைத் தாங்கி நாக என்பவன் கோதிமதக என்ற இன்னொருவரோடு சேர்ந்து அளித்த குகைத் தானத்தை அம்பாறை மாவட்டத்திலுள்ள பம்பரகஸ்தலாவ கல்வெட்டு (507) எடுத்துரைக்கிறது. 'பருமகன் நாக' என விளிக்கப்படும் இவன் அரண்மனைச் சமையற்சாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பருமகன் என்ற பட்டத்தினை உடைய 'நாக' என்ற பெயரைத் தாங்கியோர் கல்வெட்டுக்கள் 'சித்துல்பவுவ கொறவக்கல (631) சித்துல்பவுவ தேகுந்தர வேவ் (660) மகில் மகா விகாரை (677) ஆகிய இடங்களில் உள. இவற்றுள் முதலாவது கல்வெட்டு 'பருமகன் நாகனின் மகனை பருமகன் மிலாகவினுடைய குகை' எனக் கூறுகிறது. இரண்டாவது கல்வெட்டு பருமகன் மகாதத்தவின் மகனை பருமகன் மனவன்ன நாக என்பவனைக் கூறுகிறது. மூன்றாவது கல்வெட்டில் குகைக்குரியவர்களாக பருமகன் நாகவின் மகன், நாக, பருமகன்திஸவின் மகன் ஆகிய மூவரும் குறிக்கப்படுகின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் எல்லாமாக 7 கல்வெட்டுக்கள் உள. நுவரகந்தக் கல்வெட்டில் (922) குகைச் சொந்தக்காரராக நாகதத்தவும் பருமகன் உதயவும் குறிக்கப்படுகின்றனர். படகமுல்லே விகாரை (935) கல்வெட்டில் குகைச் சொந்தக்காரனாகிய பருமகன் அசலிய என்பவன் பருமக நாகவின் மகன் எனக் குறிக்கப்பட்டுள்ளான். கிப்பவுவ கல்வெட்டில் (958) நாக வழிபாட்டில் திளைத்த 'பருமகன் நாக குலத்தின் குகை' என்ற குறிப்புண்டு. கணேகண்ட விகாரைக் கல்வெட்டில் (979) பருமகன் வேளின் மகனாகப் பருமகன் கிலக நாக குறிக்கப்படுகிறான். கடுறுவேவ கல்வெட்டு (992) வெறுமனே 'பருமகன் நாகனுடைய குகை' என்று மட்டும் கூறுகிறது. செசேறுவக் கல்வெட்டு (1007) பருமகன் நாகவின் மகளாகிய பௌத்த சங்க விசுவாசியாகிய (உபசிகா) திஸயவினுடைய குகையைக் கூற சசேறுவக் கல்வெட்டு (1008) பருமகன் திஸவின் மகனாகிய பருமகன் நாகவின் குகை பற்றிக் கூறுகிறது. இறுதியாக கொல்லாவ விகாரையிலுள்ள கல்வெட்டு (1049) நாகமியாவைச் சேர்ந்த பருமகன்தத்த, பருமகன்மகாதிஸ என்பவருக்காக இக் குகையை அமைத்தான் என்று கூறுகிறது. நாகமியா என்பது நாக + கம, அதாவது 'நாககிராமம்' என்று பொருள் தருமா என்பது ஆராயற்பாலது. இறுதியாகப் புத்தள மாவட்டத்திலுள்ள கினககவவகண்ட (1085) கல்வெட்டு 'பருமகன்' 'நாகவினுடைய குகை' எனக் குறிப்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

அடுத்து முக்கியம் பெறுவது கமிகா பற்றிய குறிப்புக்களாகும். அநுராதபுர மாவட்டத்தில் ஐந்து கல்வெட்டுக்களில் 'நாக' என்ற பெயர் உடையோர் இப்பதவியை வகித்ததற்கான தடயங்கள் உள. இவற்றிலே கொட்ட கண்ட (175), மிகுந்தலை (1107) ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் முன்னையது கமிகா – அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியவின் மகனாகிய நாகனுடைய குகை எனக் கூற, பின்னையது கமிகா உடக புத்தவின் மகனாகிய மேலநாகவினுடைய குகை எனக் கூறுகிறது. பிராமணயகமத்தில் உள்ள இரு கல்வெட்டுக்களில் முதலாவது (149) வெறுமனே கமதா நாகவினுடைய குகை என விளிக்க மற்றது (150) குகைச் சொந்தக்காரனாக சுமணவைக் குறித்து அவன் கமிகா நாகாவின் மகன் எனக் கூறுகிறது. ரஸ்நகவ கல்வெட்டு (116) கமிகா நாகவையும் அவனோடு குகைத் தானத்தை அளித்த பட மகாதிஸ பற்றியும் கூறுகிறது. அம்பாறை மாவட்டத்திலுள்ள இரு கல்வெட்டுக்கள் 'கமிகா' என்ற பட்டத்துடன் காணப்படுகின்றன. இவற்றுள் குடும்பிகலவிலுள்ள கல்வெட்டில் (500) கமிகா திஸவின் மகனாக கமிகாநாக கூறப்படுகிறான். இவ்வாறே ஸம்பரகஸ்தலாவக் கல்வெட்டில் (513) கமிகா நாகவின் மகனை யசதேரருடைய குகை கூறப்படுகின்றது. இதன் பெயர் சுடசன்ன ஆகும். இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு கல்வெட்டு கமிகா பற்றிக் கூறுகிறது. இது பிலிமலான (777) என்ற இடத்திலுள்ளது. இதில் கமிகா நாகவின் மகன், சபா, சுமண ஆகியோருடன் கூட்டாகச் சேர்ந்து அளித்த குகைத் தானம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ககபதி என்ற பட்டத்தினைத் தாங்கிய 'நாக' என்ற பெயருடைய கல்வெட்டு ஒரே ஒரு இடத்திற்றான் உளது. இது அநுராதபுர மாவட்டத்திலுள்ள வெஸ்ஸகிரியாகும். (85) இது ககபதி நாகவின் மகனாகிய திஸவினுடைய குகை பற்றிக் கூறுகிறது.

பட/பரத என்ற பெயர்கள் பரதவரையே குறித்தன எனலாம். அநுராதபுர மாவட்டத்தில் பரதவர்கள் நாக என்ற வழிபாட்டுப் பெயரைத் தாங்கியவர்களாக 6 இடங்களிற் குறிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் நான்கு கல்வெட்டுக்களில் (128, 129, 130, 233d) 'படநாக லேன' அதாவது படநாகவினுடைய குகை என்ற குறிப்பு வருகிறது. இக் கல்வெட்டுக்கள் முறையே கண்டகல விகாரை (128, 129, 130) மகா அலகமுக (233) ஆகிய இடங்களில் உள. பில்லாவேவ என்ற இடத்திலுள்ள கல்வெட்டில் (101) பரத நாகனுடைய குகை என்ற வசனம் காணப்படுகிறது. இறுதியாக பிராமண்யாகமக் கல்வெட்டில் (159) பட நாக பற்றிவரும் குறிப்பு ஆராயற்பாலது. இவ்விடத்திலுள்ள குகையின் சொந்தக்காரர்களாகப் பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் முறையே படநாக, படசுமண, படசுமணகுதத, தத்தவின் மகளாகிய உபசிகா ராம, பௌத்த மத பெண்துறவி பாலா, பௌத்த மதகுரு தம்மகுத்த ஆகியோர் ஆகும். நாக என்பது வழிபாட்டுக்குரிய பெயரே என்பதை பரதவர் என்ற குலப்பெயரோடு அது இணைத்து இங்கே கூறப்படுவது மேலும் உறுதி செய்வதை இவற்றில் காணமுடிகிறது எனலாம். இதை விடத் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஈச்சிலம்பத்தைக் கல்வெட்டில் (387) 'படநாக' பற்றிய குறிப்புண்டு. இவன் ஏனைய புஸ, மகாசிதஸ ஆகியோருடன் குகைக்குரியவனாக இக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளான். மொனராகல மாவட்டத்திலுள்ள ரஜ மகா விகாரைக் கல்வெட்டில் (718) படநாகவினது குகை பற்றிய குறிப்புண்டு. இவ்வாறே குருநாகல் மாவட்டத்திலுள்ள படகமுல்லே விகாரைக் கல்வெட்டிலும் (935) படநாகராஜவினுடைய குகை என்ற குறிப்புண்டு.

இக் கல்வெட்டுக்களில் பௌத்த மத ஆண் விசுவாசிகள் 'உபாசக' எனவும் பெண் விசுவாசிகள் 'உபசிகா' எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்களிற் பலர் 'நாக' என்ற பெயருடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. உபாசகவினுடைய பெயரைத் தாங்கிய கல்வெட்டொன்று அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மிகுந்தலையில் (28) உளது. இது உபாசகனை நாகமித்தனது மனைவி உப சிகா சிலயவினுடைய குகை எனக் குறிக்கிறது. நாக மித்த என்பது நாகத்தின் நண்பனெனப் பொருள்படும். வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளக் கல்வெட்டொன்றும் (365) உபாசகன் நாகவினுடைய குகை எனக் குறிக்கிறது. இவ்வாறே திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்திலுள்ள ஈச்சிலம்பத்தைக் கல்வெட்டும் (1172) உபாசகன் நாக பற்றிக் குறிப்பிட்டு இவனின் தாயின் பெயராக லச்சியா (இலட்சுமி) யைக் குறிக்கிறது: உபசிகா என்ற பதமும் பல கல்வெட்டுக்களிலுள. அநுராதபுர மாவட்டத்தில் உள்ள தந்திரிமலைக் கல்வெட்டில் (112) யானைப்பாகனாகிய பதி என்பவனின் தாயான உபசிகா நாக பற்றிக் குறிப்பிடுகிறது. பொலநறுவை மாவட்டத்திலுள்ள முதுகல்ல (307) கல்வெட்டு பருமகன் சுடசவின் மனைவியான உபசிகா நாகவினுடைய குகை பற்றிக் குறிக்கிறது. வவுனியா மாவட்டத்திலுள்ள எருப் பொத்தானாவிலுள்ள கல்வெட்டு (329) பின்வரும் விபரங்களைத் தருகிறது. உபசிகா நாக என்பவள் பருமகன் கமகவின் மனைவியாகும். இவளும் இவனது மகனாகிய உபாசகதிஸவும் பௌத்த மத விசுவாசியாகிய தேவ என்பவனும் இக் குகைக்குரியவர்களாகக் கூறப்பட்டுள்ளனர். மொனராகலை மாவட்டத்திலுள்ள வலேலு கொடகந்த (724) கல்வெட்டில் உபசிகா நாக என்பவள் அகிதத்தவின் மனைவி எனக் கூறப்படுகிறாள். இவ் அகிதத்த மகாராஜ திஸ என்பவனின் சேனாதிபதியாகும். அத்துடன் அகிதத்தவின் மனைவி சேனாதிபதி புஸ்ஸதேவவின் மகள் எனவும் இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளாள். புஸ்ஸதேவ துட்டகைமுனுவின் (கி. மு. 161 – 137) படைத்தளபதிகளில் ஒருவனாவான். இதனால் அகிதத்த துட்டகைமுனுவின் தம்பியாகிய சத்ததிஸவின் படைத்தளபதியாக விளங்கியிருக்கலாம். அகிதத்த என்றால் அக்கினியால் வழங்கப்பட்டவன் என்பது பொருளாகும். இறுதியாக மாத்தளை மாவட்டத்திலுள்ள அம்புலாம்பே (834) என்ற இடத்திலுள்ள – கல்வெட்டொன்றில் காணப்படும் 'உபசிகா நாகதத்த' என்ற குறிப்பு ஆராயற்பாலது. நாகதத்த என்றாலும் நாகத்தால் வழங்கப்பட்டவன் என்பது பொருளாகும்.

பௌத்த மத குருமார்கள் இக் கல்வெட்டுக்களில் 'தேரர்' என அழைக்கப்படுகின்றனர். அவர்களும் நாக என்ற பெயரைத் தாங்கியதற்கான சான்றுகளுள. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ராஜகல என்ற இடத்திலுள்ள இரு கல்வெட்டு (451, 458) தேரர்கள் பற்றிக் குறிக்கின்றன. முதலாவது கல்வெட்டில் (451) நாகசேன தேரருடைய குகை என்று கூறி அதற்குப் பெயராக சுடாசன என்ற பெயரையும் கூறுகிறது. அடுத்த கல்வெட்டு வெறுமனே நாகசேன தேரருடைய குகை என்று மட்டும் குறிக்கிறது. இதே வசனம் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சித்துல்பவுவவிலுள்ள இரு கல்வெட்டுக்களில் (602, 609) காணப்படுகிறது. குருநாகல் மாவட்டத்திலும் வெலன்கொலக் கல்வெட்டு (978) அசிய நாக பற்றிக் கூறுகிறது. அசிய என்றால் வணக்கத்திற்குரியவர். பொதுவாக குருவானவரையே இது குறிக்கலாம். இவருடன் ககபதி அனுராதாவும் சேர்ந்து 'சுப்பதித்த' என்ற குகையைப் பௌத்த சங்கத்திற்கு அளித்ததாக இக் கல்வெட்டுக் குறிக்கிறது. இம் மாவட்டத்திலுள்ள தொரமலியாவக் கல்வெட்டு (1040) வெறுமனே நாக தேரருடைய குகை என மட்டும் கூறுகிறது, தேரர்களோடு தேரிகளும் (பெண் துறவிகளும்) நாக என்ற பெயரைத் தாங்கியதும் புலனாகின்றது. மொனராகலை மாவட்டத்திலுள்ள வலேலு கந்தக் கல்வெட்டு (725) சேனாதிபதிபுஸ்ஸ தேவனின் மகளாகிய 'நாக' பௌத்த மத பெண் துறவியாக (தேரி) மாறியதைச் 'சுமணீய' என்ற பதத்தின் மூலம் எடுத்துக் காட்டுகிறது. இவளும் அகிதத்தவை மணஞ்செய்த புஸ்ஸதேவவின் மகளும் ஒருவரோதானோ அல்லது இருவரும் வெவ்வேறு மக்களோ என்பதும் ஆராயற்பாலது.

மேற்குறித்தவாறு அரசர்கள், சிற்றரசர்கள், பருமகன், கமிகா, ககபதி போன்ற நிர்வாகிகள், பரதவர் போன்ற குலங்கள், உபாசகன் / உபசிகா போன்ற பௌத்தமத விசுவாசிகள், தேரர்கள், தேரிகள் போன்றோர் மட்டுமன்றி பல்வேறு தொழில் பிரிவினரும் நாக வழிபாட்டைக் கடைப்பிடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமைக்குச் சான்றுகள் உள. அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வெஸ்ஸகிரிக் கல்வெட்டு** (80) தலதர நாக (பொற்கொல்லன் நாக) பற்றிக் குறிப்பிடுகிறது. இதே மாவட்டத்திலுள்ள கல்கே கல்வெட்டு (1122) நீதி நூல்களிற் தேர்ச்சி பெற்ற நாக பற்றிக் குறிப்பிடுகிறது இவ்வாறே அம்பாறை மாவட்டத்திலுள்ள 'நாக' என்ற பெயருடைய கல்வெட்டு (507) இவனின் தொழில் அரண்மனைச் சமயங் கூட மேற்பார்வையாளர் எனக் குறிப்பிடுகிறது. குருநாகல் மாவட்டத்திலுள்ள கல்கமுவவிலுள்ள கல்வெட்டு (1033) மணிகள் வியாபாரியான நாக பற்றிக் குறிப்பிடுகிறது. இதே மாவட்டத்திலுள்ள கனேகந்த விகாரைக் கல்வெட்டு (1196) கபரநாக (கம்மாளனுகிய நாக) பற்றிக் கூறுகிறது. இதைவிட நாகவழிபாட்டிலீடுபட்டோர் இந்துமதக் கடவுளராகிய **அக்னி, ராம, இலட்சுமி ஆகிய தெய்வங்களை வணங்குவோர் குடும்பத்தினையும் சேர்ந்திருந்ததை மேற்கூறிய கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இதனுல் பௌத்த மதம் இங்கு வந்தபோது நாக வணக்கமும் இந்நாட்டு ஆதி வழிபாடாக இருந்தது தெரிகிறது.** இவ் வழிபாட்டு முறைகளோடு பின்னர் இந்துக் கடவுளர் வழிபாடும் சங்கமித்தது. இதனையே ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்துக் காட்டுகின்றன. இதனையே பௌத்த கட்டிடங்களிற் கலந்து காணப்படும் நாக, நாகினிச் சிற்பங்களும் பிற இடங்களிற் காணப்படும் நாகபாம்பு சிற்பங்களும் உறுதிசெய்கின்றன. இது பற்றி விபரமாக ஆராய்வதற்கு இக் கட்டுரையில் இடவசதி இல்லை. எனினும் நாகவழிபாடு தொடர்ந்து நீடித்திருந்ததற்கான சான்றுகளை நாம் மறுக்க முடியாது.

புத்தபிரான் ற்கொண்டதாக நம்பப்படும் விஜயத்தில் நிலைத்திருந்த சிற்றரசுகள் வடபகுதியில் மட்டுமன்றி இந் நாட்டின் பிறபகுதிகளிலும் காணப்பட்டதை மகாவம்சம், தாதுவம்சம் போன்ற நூல்கள் மட்டுமன்றிப் பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்தியம்புகின்றன எனலாம்.

கி.பி. இரண்டாம் நூற்றுண்டுக்குரிய (கி பி. 150) ரெலமி என்ற அறிஞர் ஈழத்திலுள்ள இடங்கள் மக்கள் பற்றி தமது புவியியல் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதை இச் சந்தர்ப்பத்தில் நோக்கும்போது இக் குறிப்புக்கள் எவ்வாறு பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளை உறுதி செய்கின்றன என்பதும் நன்கு புரியும். இது பற்றி முதலியார் இராசநாயகம் அவர்கள் கூறிய கருத்துக்களை முதலில் நோக்குவாம். (Rasanayagam.C. 1926;78-79) இவ்வறிஞர் நாகர்கள் ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றித் தென் கிழக்குப் பிராந்தியங்களிலும் வாழ்ந்தார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். நாக வணக்கத்தில் ஈடுபட்டோரையே இவ்வாறு நாக வம்சத்தினர் என ராசநாயகம் அவர்கள் அழைத்தமை ஈண்டு நோக்கற்பாலது. நாக வழிபாடு திளைத்திருந்த இடங்களாக ரெலமியின் குறிப்பைக் கொண்டு ஈழத்தின் தென் பகுதி நகய்ரோய்(Nageiroi)எனவும் கிழக்குப் பகுதி நாகதீபி(Nagadiboi) எனவும் அழைக்கப்பட்டதாக இவர் குறிப்பிடுவதோடு நாக வழிபாட்டிற்றிழைத்த இரு நகரங்களையும் இராசநாயகம் அவர்கள் குறித்துள்ளார். இவற்றுள் ஒன்று அம்பாந்தோட்டைக்கு வடக்கே உள்ளது. இதனை இவர் ரொலமியின் நாகடோப (Nakadouba) என அழைக்கிறுர். மற்றது திருகோணமலைக்குக் கிட்டவுள்ள நாகதீப (Nagadiba) என்ற நகரமாகும். அத்துடன் மாத்தறைக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள நைமன என்ற கிராமத்தின் பெயர் உண்மையிலேயே நை-நாக என்ற சொல்லிலிருந்து மருவியதென்பதும் இவரது விளக்கமாகும். இதே இடத்தில் பழைய நாக கோயிலொன்றும் இருந்ததாக இவர் குறிப்பிடுகிறுர். தற் காலத்தில் மகவிற்ற என்ற இடமே பழைய காலத்தில் நாகவழிபாட்டின் நகரமாகிய மாபபட்டுன என்றும் இவர் கருதுகிறுர். பிற் காலத்தில் சோழர் படையெடுப்பு நடைபெற்ற காலத்தில் சிங்கள அரசர்கள் புகலிடம் தேடிய இடமாக மகாவம்சம் குறிக்கும் 'மகாநாககுல' என்ற இடம்தான் மேற்குறிப்பிட்ட நைமண என்பதும் இவரது வாதமாகும். ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் சின்னத்தம்பி அவர்கள் தொலமியின் குறிப்பினைப்பற்றி ஓர் நூல் வெளியிட்டுள்ளார். (Sinnatamby. J. R. 1968). இந்நூலில் நாகதீபி (Nagadibi) தற்கால-சுளதிக் பிரதேசத்திலிருந்து வட பகுதியிலுள்ள முல்லைத்தீவு வரை அடங்கியுள்ளது என்கிறார். பாளி நூல்கள் தரும் குறிப்பினை நோக்கும்போது 'நாகதீபம்' கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் மேற்கூறிய நிலப்பரப்பை உள்ளடக்கிய பகுதியாக இருந்தமை புலனாகின்றது. தொலமி கூறும் நானிகிரி (Nanigiri) திஸ மகாராமவுக்கு வடக்கே உள்ள பகுதி என இவர் இனங் கண்டுள்ளனர். அத்துடன் இதற்குச் சான்றாதாரமாக ஈழநாக என்ற மன்னனால் திஸமகாராமப் பகுதியில் புனரமைக்கப்பட்ட நாக மகா விகாரையையும் குறிப்பிடுகிறார். அத்துடன் தொலமியின் குறிப்பில் வரும் நச்சடும (Nacaduma-) என்பது திஸ்ஸமகாராமப் பகுதியிலுள்ள நாக வழிபாட்டோடு தொடர்புடைய ஓர் நகரமென்பதும் இவரது கருத்தாகும்.

மேற்கூறிய கருத்துக்கள் தொலமி காலத்தில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் களனியாறு தொடக்கம் வடக்கே வட மேல் வடமத்திய, வடமாகாணப் பகுதிகள் வரை நாக வழிபாடு, திளைத்திருந்தமையை எடுத்துக் காட்டுவதோடு தெற்கேயும், தென்கிழக்கேயும் இவ் வழிபாடு பரந்திருந்தமையையும் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இதனையே நாம் மேற்குறித்த பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்துக் காட்டியுள்ளதால் தொலமியின் குறிப்பு ஈழத்தில் நிலவிய நாகவழிபாடு பற்றிய சான்றாதாரமாக நின்று இக் கல்வெட்டுச் சான்றுகளை உறுதி செய்கின்றது எனலாம். சம காலத்தில் தமிழகத்திலும் நாகவழிபாடு நிலவியதற்கான ஆதாரங்கள் உள. மலைபடுகடாம் இதற்குச் சான்றாகும். இதில் காணப்படும் கீழ்க்காணும் வரிகள் குறிப்பிடத்தக்கன. (Subramania Pilai G. 1948: 100) அஃதாவது,

முரம்பு கண்ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்து பாம்பொடுங்கும் பயம்பு மாருளவே
குறிக்கொண்டு மரங்கொட்டி நோக்கிச்
செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறுது நெறிபொரீஇ வலஞ் செயாக்கழிமின்

இவ்வாறே மருத மரத்தின் கீழ் உள்ள புற்றிலுள்ள பாம்புக்கும், மரத்திலுள்ள தெய்வத்திற்கும் கொடுக்கப்பட்ட நிவேதனம் பற்றியும் பெரும்பாணாற்றுப்படை 232-233 கூறுகின்றது. (Subramania Pillai a. 1948: 99)

பாம்புறை மருதின் ஓங்குசினை நீழல்
பலிபெறு வியன்களம் மலிய வேற்றி

இன்னோரிடத்தில் நாகம் கொடுத்த இரத்தினக்கல்லை ஆய்வம்ச அரசன் சிவனுக்குக் கொடுத்தது பற்றிய குறிப்பு சிறுபாணாற்றுப்படையில் (95 – 99) காணப்படுகிறது. (Subramania Pilllai. a. 1948: 101)

அஃதாவது,

நிழல் திகழ், நீல நாகம் நல்கிய
கலிங்கம்
ஆலமர் செல்வற்கமர்ந்தனன் கொடுத்த
– ஆய் ஆகும்;

இச் சந்தர்ப்பத்தில் சழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் இரு பதங்கள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இவற்றில் ஒன்று அம்பாறை மாவட்டத்திற் காணப்படும் பம்பறகஸ்தலாவக் கல்வெட்டில் (522) வரும் 'நாகபவட்ட' என்ற பதமாகும். இது நாகபர்வத (நாகங்களின் மலை) என்ற பதத்திலிருந்தும் மருவியிருக்கலாம். நாக பாம்புகள் புற்றெடுக்கும் இடம் சிறுமலை போன்று காட்சியளிப்பது வழக்கம். இதனாற்போலும் இது இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம். மற்றது குருநாகல் மாவட்டத்திலுள்ள கொல்லாவ விகாரைக் கல்வெட்டில் (1049) காணப்படும் நாகமியா என்ற பதமாகும். நாகங்கள் வாழும் கிராமத்தை இப்பதம் குறித்திருக்கலாம் (நாக+கம) பொதுவாகவே நாகங்கள் புற்றெடுத்து வாழ்வது வழக்கு. இப் புற்றுக்கள் மரங்களின் கீழேதான் காணப்படுவதும் நியதி. இதனால் மரங்களின் கீழே உள்ள நாகங்களின் புற்றை, வணங்குகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மரத்தினையும் வணங்குதல் வழக்காகிவிட்டது. இதனால் நாக வழிபாடு, மர-வழிபாட்டோடு இணைந்து காணப்படுகின்றது எனலாம். - நாளடைவில் கடவுள்தான் நாகங்களின் ரூபத்தில் மரத்தின் கீழ் உள்ள புற்றுக்களில் வாழ்கிறார் என்ற நம்பிக்கையும் உருவானது. பின்னர் நாகங்கள் வாழ்ந்த புற்று மண்ணை மருந்தாகப் பயன்படுத்தும் மரபும் தலையெடுத்தது. ஆதலால் ஈழத்திலும் நாக வழிபாடு மிகப் பழைய வழிபாடாகக் காணப்படுவது மட்டுமன்றி இன்றுவரை நீடித்து நிலைத்த வழிபாடாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. நாகம் ஒரு புனிதத் தன்மை உடையதாக இன்றும் எங்கள் தமிழ் மொழி பேசுவோரால் கருதப்படுகிறது. இதனைக் கொல்பவர்கள் பல்வகைத் துன்பத்திற்கு ஆட்படுவார்களென்றும் இதனால் இதனைக் கொல்வது பாவம் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் உண்டு. நாகபாம்பு வீட்டிற்கு வந்தால் இறந்த ஒருவரின் உயிரே வீட்டிற்கு வருகிறது என்ற நம்பிக்கையும் உள்ளது. ஆண்மகப்பேறு, செல்வம், நீடிய வாழ்வு, நோயற்ற வாழ்வு ஆகியனவற்றைப் பெறுவதற்காக நாக உருவங்களை அமைத்து நேர்த்திக் கடனாக கோயில்களுக்கு அளிப்பது மரபு. மத்திய காலத்தில் ஈழத்தில் நாக வணக்கம் மேன்மை பெற்றிருந்ததைச் சிங்கள தூது இலக்கியங்களாகிய சந்தேஸ இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. கோகில, பரவி சந்தேஸ நூல்கள் தொந்திரா முனைக்குக் கிட்டவுள்ள வெல்ல மடமவிலுள்ள நாகர் கோயில் பற்றிக் குறிக்கின்றன. பரவி சந்தேஸம் இக் கோயிலில் நாக கன்னிகையர் போன்று வனப்புடைய நங்கையரைக் கண்டு களிக்க வந்த இளம் காதலர்கள் பற்றிக் குறிக்கிறது. கோகில சந்தேஸ படத்துடனும் சுருண்ட மேனியுடனும் அழகாகக் காட்சி தரும். இக் கோயிலிலுள்ள நாக உருவம் பற்றிக் குறிக்கிறது. (Ariya-Pala M. D. 1968: 204) புராதன காலத்திலிருந்தே நாகர்களது இருப்பிடம் எனக் கருதப்படும் களனிப்பகுதியில் களனி கங்கையின் இருபுறமும் மணற்தறையில் இருந்து நாக கன்னியர்கள் வீணை மீட்டும் காட்சியை ஸ்ரீ ராகுல தமது செலவிசினி சந்தேஸத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் வடபகுதியில் உள்ள நாக கோயில் பற்றி கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக்குரிய நம்பொத்த என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது. இது தற்கால நாகர் கோயிலாக இருக்கலாம். பௌத்தத்துடன் நாக வழிபாடு சங்கமித்தது போன்று இந்து மதத்திலும் சிவன், விஷ்ணு, உமை போன்ற தெய்வங்களின் வழிபாடு மேன்மையடைய நாக வழிபாடும் இவற்றுடன் சங்கமித்தது எனலாம். இதற்காதாரங்களாக சிவனின் அணிகலமாக நாகபாம்பு இருப்பதும் நஞ்சுண்ட கண்டனாகச் சிவன் விளங்குவதும். விஷ்ணு பாம்பாகிய ஆதிசேஷன் மேல் அறிதுகில் கொள்வதும் அமைகின்றன. நாகர் கோயிலில் இன்று மூலஸ்தானத்தில் லிங்கத்திற்கு இடமளிக்கப்பட்டாலும்கூட இங்குள்ள நாகவழிபாடு நாக, சிவ வழிபாட்டின் சங்கமிப்பையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம். இத்தகைய நாக, ஈஸ்வரி வழிபாட்டின் சங்கமிப்பையே நயினை நாகபூஷணி அம்மன் திருத்தலம் எடுத்துக் காட்டுகின்றது. ஒரு கால் நாட்டின் பெரும் பகுதியை உள்ளடக்கிய 'நாகதீபம்' என்ற பதம் இன்று நயினைத்தீவை மட்டுமே குறித்து நின்றாலும் இங்குள்ள வழிபாட்டு மரபு ஈழத்தின் ஆதி வழிபாட்டிற்கும் அதன் தொடர்ச்சிக்கும் இன்றும் சான்றாக நிற்பது போற்றத்தக்கது. இன்றும் நாகத்துடன் தொடர்புடைய நாகம்மா நாகலிங்கன் போன்ற பெயர்கள் மக்கள் மத்தியில் வழக்கிலிருப்பது இவ்வழிபாட்டின் தொன்மையை, தொடர்ச்சியை, மேலும் வலியுறுத்தி நிற்கின்றது எனலாம்,

---

## உசாவியவை:


1. Ariyapala, M. B., 1968, **Society in Mediaeval Ceylon**, (Colombo),
2. Paranavitana, S., 1970. **Inscriptions of Ceylon**, (Colombo),
3. Rasanayagam, C., 1926, **Ancient Jaffna**, (Madras).
4. Sinnathamby J. R., 1968, **Ceylon in Ptolemy's Geography**, Colombo.
5. Subramania Pillai, G., 1948, **Tree Worship and Ophiolatry**, (Annamalai)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவம் எங்கள் தீவு

சிவகுருபரராசசிங்கம் (பசிக்கவி)

ஈழமணித் திருநாட்டிடை யாழக மிலங்கெழு தீவுகளில்
இருங்கடல் நாற்புறமெழுப்பலை யிசைதர இருந்திடு மெந்தீவு
ஆழமதற்ற சுனைகளும் சாக்களும் அணிசெயும் எந்தீவு
அன்னை நாகேஸ்வரி அருள்தர அடியவர் அணிதிர ளெந்தீவு
வேழமுகத்தவன் ஆறுமுகத்தவன் வீரபத்திரன் கோயில்
வீரமாகாளி ஐயனார் வைரவர் பிடாரி மீனாட்சி யெனும்
ஊழகல் வரமருள் கோவில்கள் சூழ்ந்திடும் உன்னத மணித்தீவு
ஓங்குபுகழ் மணிபல்லவம் வளமிக வுறுபயன் செறிதீவு 1

சங்கமுதற் றமிழ்க் காவியம் போற்றிடு தன்மைய தெந்தீவு
சாக்கிய முனிமுதல் சற்குண ஞானியர் தரிசித்த தெந்தீவு
சிங்கவேறனைய நற்காளையர் தோள்வலி திண்மைய தெந்தீவு
தேவநக ரெழிற் கன்னியர் கற்பினில் சிறந்தது மெந்தீவு
செங்கதிரொளி யெனத் திசைதொறு மெம்மவர் சேவை செயுந்தீவு
தீவகமெங்கணும் புகழ்மணம் வீசியே திகழ்வது மெந்தீவு
சிங்களர்தானுமே புனிததலமெனச் சிந்தை கொளுந்தீவு
சிறியது கீர்த்தியில் பெரியது சீர்மணி பல்லவத் தீவதுவே 2

நிலைபெறு கல்வியும் நிதியமும் நீதியும் நிறைவுறு மெந்தீவு
நீடுபுகழ்க் கவிபாடுநர் கலைவலர் நேயருறைதீவு
கலைவளர் மன்றுகள் அயர்வறு பணிபல கண்டது மெந்தீவு
கற்றவர் வித்தைமாண் புற்றவர் தம்மையே கௌரவித்திடுந்தீவு
கொலைமுதற் பாதகச் செயல்தனை நிந்தைசெய் கொள்கைய தெந்தீவு
கூரறிவாளர்தம் பண்புகள் கூடியே கோலங்கொளுந்தீவு
கலைமகள் அலைமகள் மலைமகள் மூவர்தம் கண்ணளி சேர்தீவு
காசினியில் மணிபல்லவத்தின் புகழ் காப்பதும் எங்கடனே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்திடுக
## (நின்புகழ்)
## மணிபல்லவம்

ஈர்பத்து எட்டினிலே
இலங்குகின்ற எம்மணியே!
வேர்பட்டுப் போகாமல்
விழா வெடுக்க விழைகின்றோம்
கார்பட்டு நின்றதனால்
கண்கலங்கி நின்றாயோ!
மார் தட்டி நிற்கின்றோம்
மணிபல்ல வத்தாயே!

ஊர்தொட்டு உலகத்தின்
உளம் தொட்டு வெளிநாட்டில்
பார் தொட்டுப் பயன் காணும்
பல நூறு இளைஞர்களும்
வார் பட்டு உடுத்திருக்கும்
வண்ணத் தமிழணங்கின்
சீர் தொட்டு விழாவெடுக்கத்
திரண்டுமே நிற்கின்றார்

தார் போட்டுப் பார்த்திடுவோம்
தமிழ் வளர்த்த சான்றோர்க்கு
ஊர் போற்ற வாழ்ந்திட்ட
உத்தமர்க்கும் உணர்ச்சியொடு
பேர் போற்றி விழா வெடுப்போம்
பேறு! மணி பல்லவத்தின்
தேர் ஓட்டம் சிறப்பதுபோல்
திக்கெட்டும் சிறந்திடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மாற்றிலாத் தங்கமன்ன
## பணி பல்லவத்தைக் காணீர்"

நயினைக் கவி காளமேகம்

எழில்மிகு மீழநாட்டில் ஏழுநற் தீவிலென்றாய்
மிளிர்தரு கின்றதீவு மேன்மைகொள்—நயினாதீவாம்
ஒளிதரு ஞானமோங்கும் ஒப்பிலாப் புத்தர்பாதம்
களிதரக் கண்டதீவு கவலையொன் றில்லாத்தீவே.

நாற்றிசைப் புணரிசூழ நாயக மாயமைந்து
போற்றிசைப் பாடல் சேர்க்கும் புலமைகொண் டுலகமாந்தர்
சாற்றிடு நறுஞ்செஞ்சாலி கமுகுமா கன்னல்வாழை
மாற்றுயர்ந்திடு பொன்னாகு மணிபல் லவத்தீவன்றோ.

கல்வியறி விற்சிறந்த கம்பன் போலக்
    கவிதைசெயு மாற்றல்மிக்கோர் கலைகளெல்லாம்
பல்வகையாய்ப் பாடுதற்கும் பரமநாமம்
    பார்முழுதும் பவனிவரச் செய்வதற்கும்
தொல்வினையென் றில்லாதோர் வாழும்நாடு
    தூயதமிழ் வாணருறைத் தொன்மைநாடு
தூயதமிழ் வாணருறைத் தொன்மைநாடு
    நல்லனவன் றல்லாத நாளும் செய்யார்
    நயினைமணித் திருநாட்டு நல்லோர்தாமே.

முப்பத்து முக்கோடி தேவரொடு மோனநிலை
    மேவித் தரித்திருக்கும்
முனிபுங்க ரோடுபல முக்கால மேயுணரு
    மிகுபக்தி கொண்டபேரும்
தப்பாது சேவிக்க வருள்சுரந் தவரவர்க்
    கரீயபல நல்குமாற்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாகி யங்கயற் கண்ணியென வாய்வந்த
தற்பரைக் குரியகோயில்
எப்போது மெம்மவர்க ளிடர்தீர்க்கு மபிராமி
இதயத் துறைந்து வாழும்
எழில்மிக்க மணிபல்ல வத்தீவ தென்றிடினில்
என்புருகு மன்புசொரியும்
இப்போது மவளருளி லின்பஞ் ஜொலிக்கின்ற
ஏற்றமிகு நயினையூரில்
இயலிசையு நாடகமிலங்க வருள் செய்குவாள்
எம்பிரான் பங்கிலுறைவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## — நயினைப்புகழ் —

1

நயினை என்பது நம் தாய்த்திரு நாடு
நாகம்மை அருள் பொழியும் நலம்மிகு நாடு
புதுமை இங்குண்டு, புகழும் மிகவுண்டு
புவிக்கே கீர்த்திதரும் பெருமையும் உண்டு. (நயினை)

2

அக்கரையில் நின்றுபார்த்தால் அழகிய தோற்றம்
அம்பிகையின் கோபுரத்தின் எழில்மிகு ஏற்றம்
இக்கரைக்கு வந்துவிட்டால் அடியவர் கூட்டம்
எல்லோர்க்கும் அருளமுதம் உயரிய தேட்டம் (நயினை)

3

தேரோடும் வீதியெல்லாம் திருவருள் நாட்டம்
தெய்வத்தாய் சந்நிதியில் உருப்பெறும் ஆட்டம்
பார்யாவும் பணிநாக பூஷணி அம்மை.
"பார்த்தாலே பசிதீரும்" சங்கதி உண்மை (நயினை)

4

— வேறு —

புத்தரின் தூபிகளும் பத்தர் வருகைகளும்
சித்தம் மகிழவைக்கும் செய்திகளாம்
சித்தர் முத்தர்களும் சீலம் உயர்ந்தவரும்
நித்தம் அவதரிக்கும் பூமியிதாம். (நயினை)

5

அல்லா யேசுமுதல் அகிலம் போற்றுமதம்
எல்லாம் இங்கிருக்கும் ஒற்றுமையாம்
கல்லா மனிதர்களும் கவிதை பாடுகின்ற
சொல்லே குழவருள சொற்கமிதாம். (நயினை)

6

முன்னர் மேகலையாள் முகிழ்த்த கோமுகியில்
பின்னர் பிறப்பறிந்த பல்லவமாம்
அன்னை சத்திபதி அறுபத்து மூன்றினிலே
நன்மை தருகின்ற பீடமிதாம். (நயினை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

'புலவர் நாகமணி பொன்னர்' கஸ்தூரி
பலபேர் பாடுகவிப் புலமை யுண்டாம்
குருவில் உயர்ந்தகுரு கயிலைநாதகுரு
குருக்கள் பரம்பரையும் இங்கு உண்டாம். (நயினை)

8

உலகின் சமரசத்தை உணர்ந்த சந்திரனுர்
உயர்ந்த சமயநெறி உயர்வு முண்டாம்
அலகில் கலைபெருக ஆக்கப் பணிவளர
இளைஞர் கூட்டுகலா மன்றமுண்டாம்,

9

தீர்த்தக் கரையினிலே சிறந்த அடியவர்கள்
நேர்த்திக் கடன் செலுத்தும் ஊற்றுமுண்டாம்
கீர்த்திக் கொருமுனிவன் கிடந்து கல்லறையில்
சீர்த்தி பாடுகின்ற சிறப்பு முண்டாம்

10

சாகும் மானிடர்க்கும் சல்லிவரவையிலே
வேகச் சிறந்ததொரு சுடலையுண்டாம்
போகும் போதுயிர்க்குப் பொங்கு கடல்அமைதிப்
போக்கில் உயர்ந்ததொரு பொசிப்புமுண்டாம்.

கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

அடிக்குறிப்பு:-

பொன்னர் - வரகவி மார்க்கண்டர் பொன்னர்
கஸ்தூரி - வரகவி ஆ. இராமுப்பிள்ளை
சந்திரனுர் - ஈழத்து இல்லறஞானி க. இராமச்சந்திரன்
முனிவன் - நயினைச் சித்தர் முத்துலிங்கசாமியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய மணி பல்லவமே!

கா. பொ. இ. குலசிங்கம்
( நயினை இராகுலம் )

இந்து சமுத்திரத் திலங்கிடு முத்தாம்
எழிலார் இலங்கைத் தீவின் கண்ணே
சிந்திய முத்துளே சிகரமா யொளிரும்
சிறப்பினைப் பெற்றயிச் சின்னத் தீவு
புந்தியில் இந்திரன் முந்தி யமைத்த
புவன யீஸ்வரி பீட மென்பதால்
வந்தனைக் குரிய வரமுடைத் ததுவே
வாழிய வாழிய மணிபல் லவமே!

ஆதியும் அந்தமும் இல்லா அம்பிகை
அமர்ந்தருள் புரிந்திடு மரிய மகிமையும்
போதி மாதவன் புத்த பெருமான்
பொன்னடி யிங்கு பதித்த பெருமையும்
கற்றவர் மலிந்திட மற்றவர் போற்றும்
கவினொடு திகழும் மக்கள் திறமையும்
நற்றவப் பதியாள் நவின்றசொத் தெனவே
நலமுடன் வாழிய மணிபல் லவமே!!

இருபதி னெட்டு வருடம தாக
இயலிசை நாடக மெனக்கலை வளர்க்கும்
பெருமையும் புகழும் பெற்று மிளிரும்
பெண்ணே! மணி பல்லவ மன்றே!
வித்தகர் பலரும் விளங்கிடும் தீவில்
வித்தைகள் பலதை விதைப்பவள் நீயே!
எத்தனை யெத்தனை இடர்மிகுந் தாலும்
எழிலுடன் வாழிய மணிபல் லவமே!!!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுக மணி பல்லவமே எழுச்சி பொங்க

நாற்புறமும் கடல் உடுத்த நயினை நங்கை
நாக மொடு பரமர்தனை அணைத்து இங்கு
நன்னீரால் தாக மது தீர்க்கும் அன்னை
நாகமதன் கீழ் இருந்து அருளை அள்ளி
தாக மொடு வருபவர்க்கு ஈந்து நல்கி
தாயாக மிளிர்கின்ற நயினை நாட்டில்
தனக் கென்றும் ஈடில்லா கலையை அள்ளி
திருகின்ற கலா மன்றம் ஆண்டு நாலு
ஏழாகி மிளிர் கின்ற ஏற்றம் காண
**எழுக மணி பல்**லவமே எழுச்சி பொங்க
எழ்தீவுள் எழில் மதங்கள் நானகு இங்கு
ஏற்றமுடன் உயர்ச்சி பெற்று கலையை போற்ற
மாதவியின் மடியினிலே மலர்ந்த மங்கை
மணி பல்லவத்தின் புகழ் சேர்த்த அருளின் தங்கை
மாதாவாய் இத் தீவு மலரடி வேண்டி
மங்கை நீ வயதிருபத் கெட்டை தாண்டி
கன்னியென கலைபேச கோமுகியாள் வந்தாள்
காலத்தின் திருவதனம் மேகலை யாய் வந்து
கலைகள் அறுபத்தி நான்கும் காட்சி கண்டாய்
காண்பவர்க்கு எழில் சிலைகள் மூன்று காண
வான் முட்டும் புகழ் படைத்த வள்ளுவர்க்கும்
வாயார தமிழ் தந்த பாரதிக்கும்
வாதங்கள் சமய நெறி தன்னைக் கண்ட
வானவர்க்கு மேலான நாவலர்க்கும்
நயினையிலே சிலை தந்து கலையை சொல்வாய் - உனை
நாடுகின்றோர் உன் பணியை தொடர்ந்து செய்ய
நல்ல பல திட்டங்கள் நயினை மண்ணில்
நாளுக்கு நாள் உயர எழுகமணி பல்லவமே எழுச்சி பொங்க

**க. ந. ஜெயசிவதாசன்**
(மணிபல்லவ கலா மன்ற
உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

Theva Stores

WHOLESALE RETAIL

GRAPES SUPPLIERS & COMMISSION AGENTS

193, Olcott Mawatha,

COLOMBO-11.

T'Phone: 20405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shantha Snack Bar

Olcott Mawatha,
COLOMBO-11

# සාන්ත ස්නැක් බාර්

බෝධිරාජ මාවත,
කොළඹ 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED BY



# Ajantha Hotel Ltd.

**125, Olcott Mawatha,**

**COLOMBO-11.**

T'Phone: **28089**

**432769**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by

# Ratmal Trading Co. Ltd.

84, MALIBAN STREET,
**COLOMBO-11.**
T'Phone: 24550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

★

Nawagiri Snack Bar
Nawagiri Cool Spot
Nawagiri Cream House
Nawagiri Sweet House
Nawagiri Fruit Drinks

★

T'Phone: 23196

★

නවගිරි ස්නැක් බාර්
නවගිරි කූල් ස්පොට්
නවගිරි ක්‍රීම් හවුස්
නවගිරි ස්වීට් හවුස්
නවගිරි පලතුරු බීම

★

No. 7, Kalyani Mahal,
5th Cross Street,
COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නිව් වාසනා ස්වීට් හවුස්
අලුත් මීගමු පාර,
ජා-ඇල

New Vasana Sweet House
**New Negombo Road,**
**JA - ELA.**

**O. K. BEEDI Co,**

35/25, Galkandha Mawatha,
MAWANELLA.

**P. B. S. BEEDI Co,**

*Aluthnuwara Road,*
*HINGULA.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by:

T'Phone: 545868

# S. D. S.

**Dry Fish Merchants & Commission Agents.**

19, Old Butcher Street,
COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

SALIKA CREAM HOUSE

සාලිකා ක්‍රීම් හවුස්

109 / 20, Private Bus Stand,
Sounders Place,
COLOMBO - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED BY:

T'Phone:
433831

# NEVILSON'S

GENERAL MERCHANTS & DRYFISH DEALERS

201, Keyzer Street,

COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K. M. Henry perera

189, Natuduwa,
KELANIYA.

Wholesale & retail dealer
for

★ **Empty Boxes**
★ **Empty Gunny Bags**
★ **Chicken Foods**
( GROWERS, LAYERS MASH )

Wishing the people prosperity
with Peace keeping.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Sena Trades (Pvt) Ltd.

General Merchants & Commission Agents

41 - 43, 5th Cross Street,
COLOMBO-11

☎ 422214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Sumangali
## JEWELLERS

DEALERS IN 22 CT JEWELLERY

සුමංගලි ජුවලර්ස්

சுமங்கலி ஜுவலர்ஸ்

208, P/1, Sea Street,
COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

*Sri Kalyani Traders*

GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS.

**S.**

**K.**

**T.**

Phone: **549255**

**79, 5TH, CROSS STREET,**
**COLOMBO - 11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FRANCIS ENTERPRISES

Authorized Dealer for Marine Out Boat Motors,
Yamaha Out Boat Motors
&
Spare Parts.

**Distributors of Fishing Gear**

2nd FLOOR
S-8, Central Super Market Complex.
**COLOMBO - 11.**

---

# PERNATHETH TRANSPORT

**South Bar,**
**MANNAR.**

**ROSE COT**
**BEACH ROAD,**
**POINTPEDRO.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kurunche Traders

GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS

**K.T.S.**

**Phone:**

173, 5th Cross Street.
COLOMBO - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# "AINGARAN"

No 14, BUS STAND,

**JAFFNA.**

*With the best Compliments from;*

T'Phone:

**422245 — 29597**

# ANISA & CO.,

Merchants, Agents & Commission Agents

No 96, 4th Cross Street,,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# VAJIRA TRADERS

*General Merchants & Commission Agents*

**123, 5th Cross Street,**

**COLOMBO - 11**

වජිරා ට්‍රේඩර්ස්

123, 5වෙනි හරස් වීදිය,

කොළඹ - 11

T'Phone: **24942**

# வஜிரா டிரேடர்ஸ்

123, 5-ம் குறுக்குத் தெரு,

கொழும்பு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# S. L. FERNANDO & CO.

DRIED FISH

No. 24, Old Butcher Street,
COLOMBO - 11 *Tele: 421615*

With the best Compliments from

# G. D. S.

Dry Fish Merchants & Commission Agents.

24, Old Butcher Street,
COLOMBO - 11 Tele: 21615

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# K. T. C.

හාල් **RICE** அரிசி

☎ 421961

## Karuna Trading Co.,

73, 5th Cross Street,
COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With the best Compliments from:**

(A. P. S.) T' Phone: 437468

*B. V. M.*

**PUSHPAHS STORES**

Dry Fish Merchants & Commission Agents

No. 21. China Lane,

COLOMBO-11

**With the best Compliments from:**

**D. V. S.**

Dry Fish Merchants & Commission Agents.

No. 15, China Lane,

COLOMBO - 11 *Tel: 36440*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Sunil Traders

COMMISSION AGENTS

No. 57, 5th Cross Street, Pettah,

COLOMBO-11.

සුනිල් ට්‍රේඩර්ස්

T'Phone: 545400

சுனில் டிறேடர்ஸ்

57, 5-ம் குறுக்குத் தெரு,

புறக்கோட்டை, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# S. R. T.

## JOHNSON DRYFISH STORES

No. 29, Keyzer Street,
COLOMBO-11.

With the best Compliments from

# Rochars Traders

DEALERS IN TEXTILES AND FANCY GOODS

Prop: A. R. M. RALEEN (NILAM)

128 1/1 F (6) 1st Floor,
Favourite Shopping Centre,
Keyzer Street,
Colombo-11.

Phone: 545388 (Shop)
522629 (Res)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by:

T'Phone: 27884

# K. R. N.

GRAPES SUPPLIERS
&
COMMISSION AGENTS

**75, 5th Cross Street,**
**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMBALS
## JEWEL HOUSE
## &
## PAWN BROKERS

JEWELLERY & GEM MERCHANTS

49, SEA STREET, COLOMBO-11.

✲ PHONE: 26241 / 432704

Branch:

**AMBALS JEWELLERS (PVT) LTD.**

33, Galle Road, Wellawatta,

Colombo-6.

---

With the best Compliments from:

✲

422271

✲

**T. MOTCHAM FERNANDO**


General Merchants & Commission Agents

205, Keyzer Street,

COLOMBO-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:



# Sri Murugan Traders

Importers, General Merchants
&
Commission Agents,


Dealers in: Best Tea, Dry Fish, Rice
&
Ceylon Produce.

No. 25. St. John's Road,
COLOMBO-11

☎ 431503

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED BY



# Pearlites & Pearlites (Pvt) ltd.

Dealers in all kinds of Electrical Goods

78, Maliban Street,

COLOMBO-11

T'Phone: 24821
28244

A. Sivanandarajah,
(SIVA)
(MANAGING DIRECTOR)

Telex: 21974 Montien Ce
Attn. Siva
Fax No 437110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Dinorshan Trading Co.

General Merchants,
Commission Agents
&
Importers

Dealers in: **Milk Foods, Nestle's Products**
**&**
**Fireworks**

1350, MANNING MARKET,
OLCOTT MAWATTA
COLOMBO-11

T'phone: 546383, 25929 Wire: DINOSAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Thread House

**238, 2nd Cross Street,**

**COLOMBO-11**

With the best Compliments from:

# Colombo Trading Centre


No 66c, Galle Road,

DEHIWELA.

Tel: 713677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:



713089

# DEHIWELA GOLD HOUSE

No. 66, GALLE ROAD,

DEHIWELA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

KUMARAVEL COY.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Dealers in: **PROVISIONS**

T'Phone: 4 2 1 0 5 7

217, Fifth Cross Street,
COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Asia Traders

IMPORTERS
&
GENERAL MERCHANTS

**T'Phone: 432415**

16, St. John's Road,
COLOMBO-11.

கதிர்காமநாதன்

With the best Compliments from

# PRAMAWARDANA & CO.

**6, St. John's Road,**
**COLOMBO-11**

குலசிங்கம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

**GILLETS CONFECTIONERY (PVT) LTD.**

Manufacturers of

**AJANTHA TOFFEES & SWEETS**

480, K. C. C. Perera Mawatha,
Blomendhal Road,
COLOMBO-13.

T'Phone: 435552

With the best Compliments from:

**SIRIMAL SWEETS**

THALABOLA, THALAKARALI
CADJU PIECES,
&
OTHER SWEET PRODUCTS

**Deepangoda,**
**HOMAGAMA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# Shanmuga Agencies

Commission Agents

No. 45, 4th Cross Street,

COLOMBO - 11

**Phone:** 421943

With the best Compliments from:

**S. S. R. & Co.**

# SIVASHANMUGARAJAH & Co.

GENERAL MERCHANTS, COMMISSION AGENTS

&

EXPORT SUPPLIERS.

45, 4th Cross Street,

COLOMBO - 11

*Phone:* 436077



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# VANARSONS (PVT) LTD.

★ Paper Merchants, Stationers,

★ Imported Wedding Cards,

★ And Printers Requisites.

T'phone : 24821, 437110
T'Grams : "VANARSONS"
Telex : 22778 Twins Ce
Fax : 437110

**78, Maliban Street,**
**COLOMBO-11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from:

# MOVIELAND

63, Maliban Street,
COLOMBO-11

547483 - 541142

மும்மொழிகளிலும்
அழகுமிளிரும்
அச்சுப்பதிப்பு
வேலைகளுக்கு
யாழ்நகரில்
தன்னிகரில்லா
அச்சுப்பதிப்பாளர்கள்

## ஸ்ரீ லங்கா அச்சகம்

*234ஏ, கே. கே. எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி: 24175*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபல்லவம் மலர்
சிறப்புற
எங்கள் வாழ்த்துக்கள்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபல்லவம் மலர் சிறப்புற

எமது

நல்வாழ்த்துக்கள்

# "சித்ராஸ்"

முள்ளி வீதி, ★ அரியாலை.

எங்களிடம் சகலவிதமான

பாவனைப் பொருட்களும்

பெற்றுக்கொள்ளலாம்.

உரிமை: பொன். சற்குணநந்தன்
நயினாதீவு.

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 24175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org